பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 25 வெள்ளிக்கிழமை 08.04.2022 கதிர் 154

இனி இது ரகசியம் அல்ல!

தென்னிலங்கை அரசியல் ‘பாம்பும் ஏணியும்’ (snake and ladder) விளையாட்டுப் போல மாறி மாறி ஏறி இறங்கும் நிலைமையில் காணப்படுகின்றது. இன்றும் கூட அப்படித்தானாகும் போலத் தோன்றுகின்றது.

நேற்று முன்தினம் ☞2

# கோட்டா விரும்பினால் பதவி விலக முடியும்



## தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் தேசப்பிரிய தெரிவிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரும்பினால் அவர் எந்நேரத்தில் வேண்டுமானாலும் பதவி விலக முடியும்.

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தாம் நினைத்தால் பதவி விலகும் ஏற்பாடு ஜனாதிபதிக்கு உள்ளது. இது தொடர்பில் சபாநாயகருக்கு கடிதம் அனுப்பிவிட்டு அதனை அவர் செய்யலாம்.

புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் வரை, பிரதமர் ஜனாதிபதியாகச் செயற்படலாம்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ இரண்டு தடவைகள் ஜனாதிபதி பதவியை வகித்து விட்டார். அதனால் சிக்கல் வருமோ தெரியாது வந்தால் அடுத்த வாய்ப்பு சபாநாயகருக்கு உள்ளது – என்றார்.

# பதவியைத் துறக்கமாட்டேன்!

## ஜனாதிபதி கோட்டா திட்டவட்டம்



கொழும்பு, ஏப்ரல் 08

நான் ஒருபோதும் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய மாட்டேன். ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் எனது பதவியில் தொடர்ந்து நீடிப்பேன்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். ☞2

# சர்வாதிகார ஆட்சி வேண்டாம்!

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை விரைவில் ஒழிக்கப்படும் என்று போராட்டத்தில் சஜித் சூளுரை



இலங்கை ஜனநாயக நாடு. இங்கு சர்வாதிகார ஆட்சி வேண்டாம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, தொடர் மின்வெட்டு, பொருள்கள் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு ☞2

# கோட்டா பதவி விலகினாலே ஆதரவு வழங்கும் ஜே.வி.பி.

## அதன் தலைவர் அநுர பகிரங்க அறிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால், நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்வதற்கான தீர்வுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கத் தயார்.

– இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

–அத்துடன், ☞11

# அவசரகால நிலைப் பிரகடனத்தை ஆட்சேபிக்கும் மனுக்களை விசாரணைக்கு ஏற்றது உயர்நீதிமன்றம்

கொழும்பு, ஏப். 08

கடந்த முதலாம் திகதி முதல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்திய அவசரகால நிலைமை, அதன் கீழ் அறிவிக்கப்பட்ட 36 மணி நேர ஊரடங்கு, அவ் வேளையில் முன்னெடுக்கப்பட்ட சமூக ஊடக முடக்கம் ஆகியவற்றுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்களை கொழும்பில் உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

நேற்று சுமார் ஐந்து மணி நேரத்திற்கு மேல் இந்த மனுக்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட வாதங்களை செவிமடுத்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முருது பெர்னாண்டோ, அச்சல வெங்கப்புலி, ☞11

# வட்டுக்கோட்டை விபத்தில் இளைஞர் பரிதாப மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த நிலையிலும், மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையிலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அராலியைச் சேர்ந்த புலோலாந்த் (வயது 22) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டையில் நேற்றிரவு இடம்பெற்ற ☞11

# அரசில் இருந்தாலும் நான் சுயாதீன நபரே

## டிலான் எம்.பி. கூறுகின்றார்



வியத் மக பெயில் என்ற தகவலை நான்தான் முதலில் வெளியிட்டேன். அதனால்தான் ஓரங்கட்டப்பட்டேன்.

– இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் ☞2

# கோட்டா அரசின் காலைவாரினார் தௌபீக் எம்.பி.



கோட்டாபய அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை மீளப்பெறுவதாக ஸ்ரீங்கா முஸ்லிம் ☞2

# கொடுத்த கடனைக் கேட்டவர் படுகொலை செய்து புதைப்பு

## யாழில் கொடூரச் சம்பவம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளார் என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம், உதயபுரம் பகுதியைச் ☞11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் தமது அலரி மாளிகை இல்லத்தில் பொது ஜன பெரமுனவின் 121 எம்.பிக்களுடன் கூட்டம் நடத்திய பின்னர், அரசைத் தொடர்வதற்குப் போதிய – தாராள – பெரும்பான்மையுடன் தாம் இருக்கிறார் என்று அவர் கருதும் நிலை காணப்பட்டது. அந்தப் பின்புலத்தில் நேற்று, தவறினால் இன்று, புதிய அமைச்சரவை பதவி ஏற்கும் என்றும் கூறப்பட்டது. ஏற்கனவே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தினேஷ் குணவர்த்தனா, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ போன்றோர் அமைச்சரவையில் உள்ளனர். இன்று மேலும் சிறிய எண்ணிக்கையினர் மீளவும் அமைச்சர்களாகப் பதவி ஏற்பர் எனத் தெரிகிறது. டக்ளஸ் தேவானந்தா, அலி சப்ரி, பந்துல குணவர்த்தன போன்றோர் அந்தப் பட்டியலில் உள்ளனர்.

'பாம்பும் ஏணியும்' விளையாட்டு என்றேன் அல்லவா? அதுவும் நடக்கும் இன்று. மொட்டு அணியில் சிலர் புதிய அமைச்சர்களாகும் அதேசமயம் இன்னொரு குழுவினர் அரசுத் தரப்பிலிருந்து பிய்த்துக் கொண்டு வெளியேறி, மற்றொரு சுயாதீனக் குழுவாகச் செயல்படும் தீர்மானத்தில் இருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. டலஸ் அழகப்பெரும தலைமையிலான அக்குழு வெளிவரும்போது ஆளும்தரப்பின் அறுதிப்பெரும்பான்மை வலு தெளிவாக – வெளிப்படையாக – இல்லாமல் போகும் என்பது உறுதி என்கின்றன முக்கிய வட்டாரங்கள். பார்ப்போம்! அப்படி ஏதும் இன்று நடைபெறுகின்றதா என்று.

நாடு இவ்வளவு அமளி துமளியில் சிக்கியிருக்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்துக்கு அதிரடி விசிட் அடித்தார். ஓர் ஐந்து, பத்து நிமிடங்கள் சபைக்குள் அமர்ந்திருந்தார். அங்கிருந்து புறப்பட்டு நாடாளுமன்றத்தில் தனக்கென ஒதுக்கப்பட்ட அலுவலக அறையில் போய் அமர்ந்தார். சற்று நேரத்தில் அவரைத் தேடி அங்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க வந்து சேர்ந்தார். மூடிய அறைக்குள் இருவரும் சுமார் ஒரு மணி நேரம் உரையாடினர். கடந்த ஒரு வாரத்துக்குள் இந்த இருவருக்கும் இடையில் நடைபெற்ற மூன்றாவது சந்திப்பு இது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அந்தச் சந்திப்புக் குறித்து, வெளியே வந்து தமக்கு நெருக்கமான சிலருக்குத் தகவல் வெளியிட்டார் ரணில்.

"இன்றைய நிலையில் நெருக்கடியைத் தணிப்பதற்கு நீங்கள் பதவியை விட்டு விலகுவதே சாலச்சிறந்தது என்று ஜனாதிபதியிடம் கூறினேன். அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். தமக்கு மக்கள் ஐந்து ஆண்டுகால ஆணை தந்திருக்கிறார்கள், தாம் ஏன் விலக வேண்டும் என்று அவர் கேட்டார். அப்படியானால் அதை – உங்களின் நிலைப்பாட்டை – தெளிவாக மக்களுக்குச் சொல்லுங்கள் என்றேன். அவர் ஒப்புக்கொண்டார். அதனை அவர் நாட்டுக்குச் சொல்வார்." – என்றார் ரணில்.

அவர் கூறியபடி அந்தத் தகவலைத் தனக்கு நெருங்கிய ஊடகவியலாளர் மூலம் ஜனாதிபதி பகிரங்கப்படுத்தி இருக்கின்றார்.

அது சரி, நாடாளுமன்றத்துக்கு வந்த ஜனாதிபதி அங்கு 'கஷுவலாக' சந்திப்பது போல ரணிலை சந்தித்து உரையாடிவிட்டு மட்டும் போயிருக்கின்றார். அதற்காக மினக்கெட்டு ஜனாதிபதியே நேரடியாக நாடாளுமன்றுக்கு ஏன் வந்தார் என்று துளாவினேன்.

அதற்கு முதல் நாள் – அதாவது நேற்று முன்தினம் – அலரிமாளிகையில் தமது மொட்டுக் கட்சியினருடன் பிரதமர் இரவு விருந்துடன் மந்திராலோசனை நடத்திய அதேசமயம், நாடாளுமன்றத்துக்கு பின்புறமுள்ள 'மொனரக் இம்பீரியல்' ஹோட்டலில் ஓர் உயர்மட்டக் கூட்டம் மாலை ஐந்து மணி முதல் ஒன்பதரை மணி வரை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்து, அதற்குத் தலைமை வகித்தவர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

அந்தக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, கரு ஜெயசூரிய, சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரட்ன போன்றோர் கலந்து கொண்டனர்.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கத் தொடங்கிய காலத்திலேயே – ஜனவரியிலேயே – இந்தப் பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் எதிரணித் தலைவர்களிடையே ஒற்றுமைப்பட்ட பொது நிலைப்பாட்டை எடுக்கச் செய்யும் நோக்குடன், இது போன்ற இரண்டு கூட்டங்களைச் சுமந்திரன் நடத்தியிருந்தார் என்பது தெரிந்ததே. அந்த வரிசையில் மூன்றாவது கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடந்தது. நாடாளுமன்றச் சுற்றாடலில் கடும் போக்குவரத்து நெருக்கடி இருந்தமையால் வித்தியாசமான நேரங்களில் அந்த கூட்டத்திற்கு ரணிலும் சஜித்தும் பிரசன்னமாகினர். அங்கு இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. அந்தக் கூட்டத்தில் எல்லாத் தலைவர்களும் ஏகமனதாக ஒரு முடிவுக்கு வந்தனர். இந்த அரசியல் – பொருளாதார நெருக்கடி சமயத்தைச் சரியாக பயன்படுத்தி நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க முயற்சிப்பது என்பதுதான் அந்த இணக்கம்.

அந்த விடயத்தில் தமது இணக்கத்தை ஒரு சிறு குறிப்பாக எழுதி, சுமந்திரனிடம் கையளித்து விட்டுப் புறப்பட்டார் ரணில்.

அவர் புறப்பட்டு சிறிது நேரம் கழித்து அங்கு வந்தார் சஜித்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்க இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார் அவர். அது மட்டுமல்ல, இந்த வேளையைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வும் உள்ளடங்கிய ஒரு ஏற்பாட்டையும் நாம் கண்டாக வேண்டும் என்று தாமாகவே கூறினார் அவர்.

"நாளை (இன்று) கொழும்பில் இருக்க மாட்டேன். தலவாக்கலைக் கூட்டத்திற்குப் போய்விடுவேன். ஆயினும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதை நாம் ஆதரிப்போம் என்ற கட்சியின் நிலைப்பாட்டை நான் அறிவிக்கச் செய்வேன்" – என்று அங்கு உறுதியளித்தார் சஜித்.

அதன்படி நேற்று நாடாளுமன்றத்தில் எதிரணியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்லயும் மற்றும் இரான் விக்கிரமரத்னவும் அந்த அறிவிப்பை விடுத்தனர்.

மேற்படி சுமந்திரன் கூட்டிய கூட்டத்தில் மேலும் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன என்று தெரிகின்றது. அவை குறித்து அரசல்புரசலாகப் புலனாய்வு வட்டாரங்கள் மூலம் தகவல் அறிந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாபய, அது பற்றி முழு விவரம் அறியவே நேற்று நாடாளுமன்றத்துக்கு வந்து ரணிலை அழைத்துப் பேசினார் என்றும், 'மொனரக் இம்பீரியல்' ஹோட்டலின் கூட்ட விவரங்களை விலாவாரியாக ஜனாதிபதிக்கு ரணில் ஒப்புவித்தார் என்றும் ஒரு வட்டாரம் தகவல் வெளியிட்டது.

இந்த வட்டாரம் மேலும் ஒரு முக்கிய செய்தியையும் கூறியது.

கடந்த வாரம் மிரிஹானாவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லம் பொதுமக்களால் சுற்றிவளைக்கப்பட்ட போது, ஜனாதிபதி தமது இல்லத்துக்குள்தான் இருந்தார். முன்னிரவில் கொழும்பு 'ஷங்கரில்லா ஹோட்டலில' நடைபெற்ற ஒரு திருமணத்திற்கு அவர் செல்லவிருந்தார். அதற்கு முன்னர் தமது இல்லத்தில் ஒரு முக்கிய சந்திப்பில் அவர் பங்குபற்றினார். அந்தச் சந்திப்பு யாருடன் தெரியுமா? ரணிலுடன். ஜனாதிபதியின் இல்லம் பொதுமக்களால் சுற்றிவளைக்கப்பட்டு நெருக்கடி ஏற்பட்டபோது பாதுகாப்புத் தரப்பினர் ரணிலைப் பின் பக்க வழியாக வெளியேற்றினர் என்றும், ஷங்கரில்லா ஹோட்டல் திருமண நிகழ்வில் பங்குபற்றுவதை ரத்துச் செய்துவிட்டு ஜனாதிபதி அன்றிரவு தமது இல்லத்திலேயே தங்கி விட்டார் என்றும் அந்த வட்டாரம் கூறியது. அரசியலிலும் நடத்தையிலும் ரணில் அசகாயசூரன்தான். 'குள்ள நரி' என்று அவரை மதியுரைஞர் பாலசிங்கம் குறிப்பிட்டமை தவறில்லைத்தான் போலும்.

– மின்னல் –

## பதவியைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'கோட்டா வீட்டுக்குப் போ' என்ற கோஷத்துடன் ஜனாதிபதிக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் நாடெங்கும் வலுப்பெற்றுள்ளன. இந்நிலையில், இந்தப் போராட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், எனக்கு எதிராக உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளால் களமிறக்கப்பட்ட சஜித் பிரேமதாஸ மற்றும் அநுர குமார திஸாநாயக்க ஆகியோரைத் தோற்கடித்து 69 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் ஆணையுடன் நான் ஆட்சிப்பீடம் ஏறினேன்.

தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் எனது ஜனாதிபதிப் பதவிக்குரிய காலம் வரை நான் பதவியில் தொடர்ந்து நீடிப்பேன்.

நாடாளுமன்றத்திலும் எனக்கு எதிராக மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் பிரேரணை கொண்டுவருவதற்குரிய பலம் எதிர்க்கட்சிகளிடம் இல்லை.

அன்று எனக்கு எதிராகக் களமிறக்கப்பட்ட இருவரும் (சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க) இன்று எனக்கு எதிரான போராட்டங்களை நடத்துகின்றனர். அவர்களின் கட்சிகளின் பிரதிநிதிகளும், ஆதரவாளர்களுமே எனக்கு எதிராக வீதிகளில் பொங்குகின்றனர்.

'கோட்டா வீட்டுக்குப் போ' என்ற கோஷத்துடன் எனக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் எதிர்க்கட்சிகளின் அரசியலே உண்டு என்பதை நாடாளுமன்றத்தில் இந்த வாரம் எதிரணியினர் நடத்திய போராட்டங்களும் பகிரங்கப்படுத்தியுள்ளன.

எனவே, நாட்டில் எனக்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் உண்மையில் மக்கள் போராட்டங்கள் அல்ல – என்றார்.

## அரசில் இருந்தாலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கையில்,

இந்த அரசில் நான் இருந்தாலும் சுயாதீன நபர் போலவே செயற்படுகின்றேன். வியத்மக பெயில் என்ற தகவலை நானே முதலில் வெளியிட்டேன். ஞானசார தேரரின் நியமனத்தைக் கண்டித்தேன்.

அதனால் மூன்றாம் வரிசைக்குத் தள்ளப்பட்டேன். இன்றைய உரையுடன் என்னை இன்னும் பின்னிலைப்படுத்தலாம். பரவாயில்லை. நான் மக்கள் பக்கம்தான் நிற்பேன் – என்றார்.

## கோட்டா அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காங்கிரஸ் உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக் அறிவித்தார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு முஸ்லிம் காங்கிரஸின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்திருந்தனர். கட்சி முடிவையும் மீறித் தான் ஆதரவை வழங்கியிருந்தனர்.

தற்போது அரசுக்கு எதிராக மக்கள் கொந்தளித்துள்ளனர். இந்நிலையிலேயே அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை அவர் மீளப்பெற்றுள்ளார்.

## சர்வாதிகார ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தும், இந்நிலைமையை உருவாக்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் தலவாக்கலையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

வங்குரோத்தடைந்த சில அரசியல்வாதிகள், தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மீண்டும் இனவாதத்தையும், மதவாதத்தையும் கையில் எடுத்துள்ளனர். இனம், மதம், அரசியல் பேதங்களை மறந்துதான் மக்கள் இன்று வீதிக்கு இறங்கியுள்ளனர். எனினும், மக்களின் போராட்டத்துக்கு முத்திரை குத்தப்படுகின்றது. எனவே, இனவாதத்தையும், மதவாதத்தையும் தோற்றுவிப்பவர்களை, தோற்கடிப்பதற்காக நாம் அறவழியில் எழுந்து நிற்போம்.

நாட்டு வளங்களை, சொத்துகளை காக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. எனவே, தேசிய சொத்துகளுக்கு சேதம் விளைவிக்காத வகையிலேயே போராட்டங்கள் இடம்பெற வேண்டும். ஒழுக்கம் உள்ள மக்கள் என்ற வகையில் போராட்டத்தில் பங்கேற்பவர்கள் அதனைப் பின்பற்றுகின்றனர் என உறுதியாக நம்புகின்றேன்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், சிறுதோட்ட உரிமையாளர்களாக்கப்படுவார்கள். பயிரிடப்படாத நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படும். சிறு தேயிலைத் தோட்டங்கள் அதிகரிக்கும் பட்சத்தில், ஏற்றுமதி அதிகரிக்கும், ஏற்றுமதி அவ்வாறு அதிகரித்தால் வருமானம் கூடும்.

அந்த வழிமுறையை நாம் கையாள்வோம். அதேபோல் லயன் யுகத்துக்கும் முடிவு கட்டப்படும். மலையக மக்களின் எழுச்சிக்காகத் தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் இணைந்து காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற யோசனையை நாம் முன்வைத்துள்ளோம். ஜனநாயக நாட்டில் தனி நபரிடம் அதிகாரம் இருக்கக்கூடாது. சர்வாதிகார ஆட்சி வேண்டாம்.

எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை இல்லாதொழிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் – என்றார்.



# தற்காலிகமான ஜனாதிபதியாக ஹர்ஷ டி சில்வாவை ஆக்குவோம்!

## ஹரின் கோரிக்கை



கோட்டபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு பொருளாதாரம் தொடர்பில் நன்கு கற்ற ஹர்ஷ டி சில்வாவை தற்காலிகமாக ஜனாதிபதியாக்குவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் –

இந்த நாடாளுமன்றில் எத்தனையோ நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் 225 உறுப்பினர்களையும் மக்கள் வெறுக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன? இதுதான் இந்த நாட்டின் நிலைமை எனவும் அவர் தெரிவித்தார்.

ஒரு வருடத்துக்கு சம்பளம் வேண்டாம் எனவும், நாடாளுமன்றில் உள்ள உணவகத்தில் உணவு உட்கொள்ளமாட்டேன் எனத் தெரிவித்த ஹரின், அனைத்து எம்.பிக்களுக்கும் இவ்வாறு கூற முடியுமா? எனவும் கேள்வி எழுப்பினார்.

நாடு இப்போது பாரிய பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. கோட்டபய ராஜபக்ஷ கௌரவமாக பதவி விலக வேண்டும். மக்களும் அதையே கோருகிறார்கள். கோட்டபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு பொருளாதாரம் தொடர்பில் நன்கு கற்ற ஹர்ஷ டி சில்வாவை தற்காலிகமாக ஜனாதிபதியாக்குவோம்.

அவருக்கு தெரியும் பொருளாதார நெருக்கடியை எவ்வாறு தீர்க்க வேண்டுமென்பது. அதை விட்டுவிட்டு பதவிக்காகவோ, தேர்தலுக்காகவோ போட்டியிட வேண்டிய நேரம் இதுவல்ல எனவும் குறிப்பிட்டார்.

அப்படி இல்லையென்றால், மக்கள் விடுதலை முன்னணியாவது ஓர் அணியாக திரட்டிக்கொண்டு தற்காலிகமாக அரசை பொறுப்பேற்று செய்து காட்டுவதற்கு வாய்ப்பளிப்போம். – எனத் தெரிவித்தார்.

# கோதுமை மாவின் விலையை உயர்த்த நிறுவனங்கள் முடிவு

கொழும்பு, ஏப். 08

ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை மேலும் 50 ரூபாவால் அதிகரிக்க கோதுமை மா நிறுவனங்கள் தயாராகி வருகின்றன என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மா நிறுவனங்கள் அண்மையில் ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 35 ரூபாவால் அதிகரித்தன.

தற்போதைய நாள்களில் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 180 ரூபாவாக உள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

பேக்கரி மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக ஒரு கிலோ கேக்கின் விலை 1,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். ரொட்டி உள்ளிட்ட பேக்கரி பொருள்கள் 50 சதவீதம் குறைந்துள்ளன எனவும் தற்போது பல சிறிய பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன எனவும் அவர் கூறுகிறார்.

சில பேக்கரி உரிமையாளர்கள் மீன் ரொட்டியை 120 ரூபாவுக்கும், ஒரு சாண்ட்விச் 250 ரூபாவுக்கும் விற்பனை செய்வதால், பேக்கரி தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ சீனியின் விலை 250 ரூபா ஆகவும், ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் ரூபா 1,100 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போராட்டம் நடத்திய பிக்குமீது அரசியல்வாதி ஒருவர் தாக்குதல்

கேகாலை மாவட்டத்தில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் முக்கிய பங்காற்றிய பௌத்த பிக்கு மீது நடத்தப்பட்ட குண்டர் தாக்குதலுக்கு காரணமானவர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள உள்ளூர் அரசியல்வாதி ஒருவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவிசாவளை – பனாவல வீதியில் வெலங்கல்ல சந்தியில் பிரதேச மக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற, மாணியங்கம ரஜமஹா விஹாரையின் விஹாராதிபதி அம்பன்வெல ஹேமலங்கர தேரர், தாக்குதலை நடத்திய தெஹியோவிட்ட பிரதேச சபையின் தலைவருக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென வலியுறுத்தினார்.

'தாக்குதலை நடத்திய குண்டர் தெஹியோவிட்ட பிரதேச சபைத் தலைவர் துமிந்து ஷியாமனைக் கைது செய்து சட்டத்தை முறையாக அமுல்படுத்த வேண்டும்.' எனத் தெரிவிக்கப்படுகிறது.

படங்கல தொழில்நுட்பப் பல்கலைக்கழக மாணவர்கள் ஏப்ரல் 5 ஆம் திகதி செவ்வாய்கிழமை அமைதியான போராட்டத்தை நடத்திய பின்னர், பல்கலைக்கழகத்திற்குத் திரும்பும் வழியில் அவர்களின் பாதுகாப்புக்காக ஓட்டோவில் பயணித்த அத்துல்கம ராகுல தேரர் மீது குண்டர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வீதியை மறித்த குண்டர்கள் குழு ஒன்று பிக்குவை தாக்கி பஸ்ஸில் ஏறுமாறு அச்சுறுத்தியதையடுத்து மாணவர்கள் அச்சமடைந்துள்ளனர். தலை மற்றும் தோள்களில் தாக்கப்பட்டதில் காயமடைந்த தேரர் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

'இப்போது நாங்கள் வைத்தியசாலைக்குச் சென்று வந்தோம். உள்ளே நான்கு அங்குல காயம் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.' என ஊடகங்களுக்குத் தெரிவித்த அம்பன்வெல ஹேமலங்கார தேரர் சீதாவக்க ராஜசிங்க மன்னருக்குப் பின்னர் சப்ரகமுவ மாகாணத்தில் இடம்பெற்ற முதலாவது தாக்குதல் சம்பவம் இதுவெனவும் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

பிக்குகள் மற்றும் அப்பாவி மாணவர்கள் மீது அரசியல்வாதிகள் இவ்வாறான தாக்குதல்களை நடத்தினால், நாட்டின் ஏனைய பகுதிகளின் பாதுகாப்பு என்னவாகும் என கேள்வி எழுப்பிய ரஜமஹா விகாரையின் விஹாராதிபதி, குண்டர்களை நாட்டில் உயர் பதவிகளுக்கு நியமிப்பதைத் தவிர்க்குமாறு வாக்காளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். தெஹியோவிட்ட பிரதேச சபையின் தலைவர் தாக்கப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜனாதிபதி கோட்டாவால் ஆலோசனைக்கு குழு நியமனம்

பலதரப்பு விவகாரங்கள் மற்றும் கடன் நிலைத்தன்மை தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதியால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, உலக வங்கியின் முன்னாள் பதில் தலைமை பொருளியலாளர் பேராசிரியர் சாந்த தேவராஜன் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆபிரிக்க திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஷர்மினி குரே ஆகியோர் இந்த குழுவில் உள்ளடங்குகின்றனர்.

## நாடாளுமன்ற வீதித்தடைத் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் வருத்தம் தெரிவிப்பு

நாடாளுமன்றத்துக்கு அருகில் உள்ள வீதித் தடையில் செவ்வாய்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் தனது வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், விசாரணையின் முன்னேற்றத்துக்கு ஏற்ப மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவ ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தது.

கடந்த 5 ஆம் திகதி பிற்பகல் நாடாளுமன்ற வளாகத்துக்கு அருகில் உள்ள வீதித் தடைக்கு இராணுவ மோட்டார் சைக்கிள் பிரிவைச் சேர்ந்த நான்கு பேர் சென்ற போது, தவறாக நடந்துகொண்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக உடனடியாக விசாரணைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு அதில் கோரப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்று இராணுவத் தளபதி இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

# நாட்டின் தற்போதைய நிலைப்பாடு; ஜம் இய்யத்துல் உலமா அறிக்கை

தற்போது நம் நாட்டு மக்களுக்கு தங்களது அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் இன, மத பேதமின்றி நாட்டு மக்கள் ஒன்றிணைந்து வீதியில் இறங்கி ஜனநாயக ரீதியாகப் போராடி வருகின்றன என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தெரிவித்துள்ளது.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

மக்கள் தமது கருத்துக்களையும் தேவைகளையும் ஜனநாயக ரீதியாக முன்வைப்பது அவர்களது உரிமையாகும். எனினும், ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் போது உயிர் மற்றும் உடைமைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலும், வன்முறையில் ஈடுபடாமலும், பொது மக்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தாமலும், இது தொடர்பான நாட்டுச் சட்டங்களைப் பேணியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று நாம் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன், எரிபொருள் பற்றாக்குறை, அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, மின் துண்டிப்பு போன்ற பல பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்ளும் இத்தருணத்தில் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குமாறும், ஜனநாயக ரீதியில் போராடிவரும் மக்களின் உணர்வுகளை மதித்து அவர்களது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டுமென்றும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான இந்நிலை அவசரமாக நீங்கி, நம் தாய்நாடு சுபீட்சம் பெற புனித ரமழான் மாதத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றது.

# அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்றில் இளைஞர்களின் பேச்சால் கண்கலங்கிய பொலிஸார்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில நாள்களாக அரசுக்கெதிராகப் பல போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் முற்றுகையிடப்பட்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமையுடன், ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றுள்ளது.

இவ்வாறான நிலையில், புதன்கிழமை குருநாகல் பகுதியில் அரசுக்கெதிராக இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டக்காரர்களை பொலிஸார் நகர விடாது தடைகளை வைத்து மறித்துள்ளனர். மீறி செல்ல முற்படும் பட்சத்தில் தாக்குதல் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் சிலர் பொலிஸாருக்கு அறிவுரை வழங்கியுள்ளனர்.

நாங்கள் உங்கள் பிள்ளைகள். உங்களுக்காகவும் தான் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எம்மோடு நீங்களும் இணையுங்கள். உங்களுடைய வீட்டில் ஒருபோதும் எரிவாயு முடிவடையாதா? உங்களுக்காக போராட்டத்தை மேற்கொள்ளும் உங்கள் பிள்ளைகளான எம்மீது தாக்குதல் நடத்துவது நியாயமா? எனவும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதன்போது கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தரொருவர் அந்த இளைஞர்களின் கருத்தால் கண் கலங்கி அழுதுள்ளார். அப்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞரொருவர் பொலிஸ் உத்தியோகத்தரை கட்டியணைத்து சமாதானம் செய்துள்ளார்.

இது தொடர்பிலான காணொலி தற்போது பொதுமக்களிடத்தில் அதிகளவு பகிரப்பட்டு காண்போரின் கண்களை கலங்க வைத்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# நேரம் அறிந்து உதவும் பாரதம்

இந்தப் பொருளாதார நெருக்கடியை ஒட்டி அரசுக்கு எதிரான கிளர்ச்சி, எழுச்சி, பொதுமக்கள் மத்தியில் முற்றியமைக்கான பிரதான காரணங்களில் ஒன்று மின்வெட்டு. மற்றையது எரிபொருள் பற்றாக்குறை.

மின்வெட்டினால் மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் பலவும் முடங்கிப் போய் விட்டன. உற்பத்திப் பாதிப்பு, ஊதிய இழப்பு என்று பல தொடர் விளைவுகள். குறிப்பாகத் தலைநகர் கொழும்பிலும், பிற இடங்களிலும் அடுக்கு மாடி வீடுகளில் இருப்போர் அனுபவிக்கும் கஷ்டம் சொல்லுந்தரமன்று. மின்விசிறிகளைக் கூட இயக்க முடியாமல் வீடுகளுக்குள் வேர்த்து, வியர்த்து, வெக்கையில் அவிந்து முடங்கிக் கிடக்கும் பாமரனின் சீற்றம் அரசுப் பக்கம் – ஆட்சியாளர்கள் மீது – இலகுவாகத் திரும்புவதும் புரிந்து கொள்ளக் கூடியதே.

வேலையால், களைத்து வீடு திரும்புவர், ஏழெட்டு மாடிக்கு படியேறிச் செல்ல முடியாத அவஸ்தையில் மின்வெட்டு நீங்கும் வரை வெளியில் மக்கள் போராட்டத்தில் நிற்போம் என்று கருதும் நிலையும் உண்டு. மின்வெட்டில் வீட்டுக்குள் அடைபட்டு வெக்கையில் மாளுவதை விட திறந்த வெளியில் நடக்கும் மக்கள் எழுச்சிப் போராட்டங்களில் கலந்து கொண்டு, நாட்டுக்கும் மக்களுக்கும் தமது ஜனநாயகக் கடப்பாட்டையாவது நிறைவு செய்வோம் என்று களத்தில் குதிப்போர் இன்னும் சிலர்.

தினசரி பதினான்கு, பதினைந்து மணித்தியாலம் வரைப்போன மின்வெட்டு இப்போது ஐந்தாறு மணித்தியாலங்களாகக் குறைந்திருக்கின்றது.

ஆரம்பத்தில் போன போக்கில் ஒரு நாளைக்கு ஓரிரு மணித்தியாலங்களுடன் மின் விநியோகம் தடைப்பட்டு விடும் நிலைமை ஏற்படும் சூழல்தான் காணப்பட்டது.

ஆனால் நிலைமை ஓரளவுக்காவது சீரடைந்து, பகுதி நேர மின்வெட்டுடன் மின் விநியோகம் தாக்குப் பிடிக்கின்றது என்றால் அதற்கு அவசர நெருக்கடிகளை அறிந்து, விரைந்து உதவிக்கு வந்த இந்தியாதான் காரணம். இந்தியாவின் நெருக்கடி காலக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் விரைந்து வந்த எரிபொருள் கப்பல்களே, இலங்கை மக்கள் கொஞ்சமேனும் மூச்சு விடுவதற்கான இடைவெளியை – நம்மை நாமே ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை – தந்து நிற்கின்றன என்பது கூடு.

இப்போது கூட கடந்த 24 மணித்தியாலத்துக்குள் 36 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல், நாற்பதாயிரம் மெற்றிக் தொன் டீசல் ஆகியவற்றுடன் நான்கு எண்ணெய்க் கப்பல்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து சேர்ந்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இந்த நெருக்கடி காலத்தில் 2 லட்சத்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை கடன் அடிப்படையில் வழங்கி உதவியிருக்கின்றது நமது அயல் தேசம்.

'அயல்தேசத்துக்கு முன்னுரிமை' என்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கைத் திட்டத்தின் கீழ் உற்ற நண்பனாக நமக்கு உதவியிருக்கின்றது பாரதம்.

தன்னுடைய சர்வதேச உறவுகள் தொடர்பான கொள்கைப் போக்கை வகுக்கும் விடயத்தில் இந்த நெருங்கிய நட்பு நாட்டின் பாதுகாப்பு, நலன் போன்றவற்றுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுவதை இலங்கை எப்போதுமே மறந்து விடக் கூடாது.

தனது கடன் பொறி வலைக்குள் இலங்கையை இன்னும் மோசமாக விழ வைப்பதற்காக, பொருளாதார ஒத்துழைப்புத் திட்டம் என்ற குறிப்பை சீனா தற்போது இலங்கை அரசுத் தலைமையிடம் ஒப்படைத்திருப்பதாகத் தெரிகின்றது. அது பற்றித் தீர்மானிக்கும் போது நெருங்கிய அயல் ஆப்த நண்பனான இந்தியாவின் நலன் குறித்து கொழும்பு ஒரு தடவை சிந்தித்துப் பார்ப்பது கட்டாயமாகும்.

# ஆர்ப்பாட்டக்காரர்களுடன் தொடர்பை பேணிய குற்றத்தை மறுத்தார் அநுர!



நாடாளுமன்றத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டம் நடத்தும் சிலருடன் இரகசிய ஒப்பந்தம் செய்தார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க மறுத்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டக்காரர்களைத் தூண்டி விட்டார் என அரசாங்கம் நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தியது.

அநுரகுமார திஸாநாயக்க ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடினார் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

இதன்போது அவர், அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்துமாறு அநுரகுமார திஸாநாயக்க ஆர்ப்பாட்டக்காரர்களை வலியுறுத்தினார் என அமைச்சர் தெரிவித்தார்.

அநுரகுமார திஸாநாயக்க, தனது வாகனத்தில் எதிர்ப்பாளர் ஒருவரை ஏற்றி வந்தார் எனவும் அவர் கூறினார்

இந்தநிலையில் அநுரகுமார திசாநாயக்க, தான் எதிர்ப்பாளர்களுடன் பேசியதை ஒப்புக்கொண்டார்,

எனினும் அவர்களைத் தூண்டிவிட முயன்றேன் எனக் கூறப்பட்டதை அவர் மறுத்தார்.

# டீசல் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் விநியோகத்தில் மோசடிகள்!

## விசாரணையில் வெளியான தகவல்

நாட்டில் நிலவும் டீசல் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் 79 ஆயிரத்து 200 லீற்றர் டீசல் கொண்ட மொத்தம் 12 பவுஸர்கள் அம்பத்தளை நகரில் எரிபொருள் நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

எனினும் இவை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்படவில்லை என தாங்கி ஊர்திகள் (பவுஸர்கள்) சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் 36 ஆயிரம் லீற்றர் கொண்ட ஆறு தாங்கி ஊர்திகள் (பவுஸர்கள் )நேற்று எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அனுப்பப்பட உள்ளன என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன நுகர்வோர் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து இந்த தகவல் வெளியாகியுள்ளது.

அம்பத்தளை நகரில் புதிதாகத் திறக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் ஜனாதிபதி செயலகத்தின் பிரத்தியேக செயலாளர் ஒருவரின் நெருங்கிய உறவினருக்குச் சொந்தமானது என்ற விடயம் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் குறித்த பிரத்தியேக செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய அதிக எரிபொருள் அம்பத்தளை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தாங்கி ஊர்திகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அனுப்பப்பட்ட டீசல், நுகர்வோர் எவருக்கும் விநியோகிக்கப்படவில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக கொழும்பு டூப்ளிகேசன் வீதியில் உள்ள பல ஹோட்டல்களுக்கு ஒரு லீற்றர் டீசல் 300 ரூபா என்ற அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றும் ஊர்திகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# மாணவர்கள் பாடசாலை சென்று பரீட்சை எழுதும் சூழல் தற்போது இல்லாமலுள்ளது!

## விஜேதாஸ ராஜபக்ஷ குற்றச்சாட்டு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை தொடர்ந்து வழங்குகிறேன் என உறுதியளித்த போதும் அது இதுவரை நிறைவேற்றப்பட வில்லை என விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக இடம்பெற்றுவரும் நாடாளுமன்ற அமர்வில் பேசிய அவர், மாணவர்கள் பாடசாலை சென்று பரீட்சை எழுதக்கூடிய சூழல் தற்போது இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது எனக் குற்றம் சாட்டினார்.

மேலும் வினாத்தாள்களை அச்சிடுவதற்குரிய பொருள்கள், எரிவாயு விநியோகம், எரிபொருள் விநியோகம் என்பன உறுதி செய்யப்பட்டுள்ளனவா என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

இந்நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவும் வகையில் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என விஜேதாஸ ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

இதேவேளை சட்டமா அதிபர் அரச உறுப்பினர்களுக்கு பக்கச்சார்பாக செயற்படுகிறார் எனத் தெரிவித்த விஜேதாஸ ராஜபக்ஷ, அவரை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணையை கொண்டு வரப்போகிறேன் எனவும் எச்சரித்தார்.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பில் பெண்கள் ஆர்ப்பாட்டம்!

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருள்கள் விலையேற்றம் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பில் பெண்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருள்களின் விலை அதிகரிப்பால் பெண்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி பெண்கள் ஒன்றியத்தால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொருள்களின் விலை அதிகரிப்பால் வடக்கு, கிழக்கில் பெண்கள் எதிர்நோக்கிவரும் நெருக்கடிகளை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் எரிவாயு விலையேற்றம், பால்மா மற்றும் எரிபொருள்கள் உட்படப் பல்வேறு பொருள்களின் விலையேற்றத்தால் தினமும் பெண்கள் பாதிக்கப்படுகின்றமை தொடர்பான கண்டன கோஷங்களும் எழுப்பப்பட்டன.

# வடக்கு, கிழக்கு கோரிக்கைகளையும் ஆர்ப்பாட்டத்தில் சேர்த்துக் கொள்க!

## உழைக்கும் மக்கள் தொழிற்சங்கம் சுட்டிக்காட்டு

ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக நாடு தழுவிய அளவில் தொடர் போராட்டங்களை நடத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட தலைமை இல்லாதது ஒரு பாரிய குறைபாடாகும் என உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஏப்ரல் 3 மற்றும் அதன் பின்னரான நாள்களில், எதிர்ப்புப் போராட்டங்களை ஒழுக்கமாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் நடத்துவதற்கு அறிவிக்கப்பட்ட தலைமை இல்லாதமை பாரிய குறைபாட்டை நாம் அவதானிக்கின்றோம்.

எவ்வாறாயினும், வடக்கு, கிழக்கு மக்களுக்கும் பிரச்சினையாக மாறியுள்ள அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகளை உடனடியாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை பதிவு செய்யுமாறு சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொது சேவை ஊழியர் சங்கம் போராட்டக்காரர்களிடம் வலியுறுத்தியுள்ளன.

சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்கஸ், ஏப்ரல் 2 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில், அரசாங்கத்துக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பது அடிப்படை ஜனநாயக உரிமை என்று கூறியுள்ளார்.

கடந்த மார்ச் மாத இறுதியில் மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்தை முற்றுகையிட்டதற்கு எதிரான போராட்டத்தைக் கட்டுக்கடங்காத வன்முறையான போராட்டமாக மாற்றியமைக்கு, அதற்கு முன்னின்றவர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் மீது, சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சமூக ஊடகங்கள் வழியாக எவருக்கும் தெரியாத மற்றும் சமூகத்தின் மீது பொறுப்பில்லாத ஒரு குழு அரசாங்கத்திற்கு எதிராக நாடு தழுவிய போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ள போதிலும் மூன்று நாள்களுக்கு முன்னர் நடந்த வன்முறைப் போராட்டத்தின் முன் முயற்சி 'பொறுப்பற்ற மற்றும் பகுத்தறிவற்ற வன்முறைகளில் ஒன்றாகும்,

இது அத்தகைய பொறுப்பற்ற மற்றும் செல்வாக்கற்ற அராஜகப் போராட்டங்களால் தவிர்க்க முடியாமல் அனுமதிக்கப்படுகிறது.– என சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவரான அன்டன் மார்கஸ் தெரிவித்துள்ளார்.

அவை மக்களின் உடனடி வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கோரிக்கைகள் அல்ல, அவை உடனடி எரிபொருளுக்கானவை. மின்சாரத்தின் மிக அவசரத் தேவைக்கு எரிவாயு தீர்வாகாது.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வில்லாத வேறு இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட 'கோட்டாவை வீட்டுக்கு அனுப்புவோம்' என்ற கோஷம் அவற்றில் அடங்கியிருந்தது.

எனவே, எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகளை உடனடியாக விடுவிக்க அழைப்பு விடுக்கும் பிரபலமான கோஷங்களுடன் போராட்டங்கள் இன்னும் தேவை.

நாளாந்த இன்னல்களுக்கு மத்தியில் அன்றாட வருமானத்தை ஈட்ட முடியாமல் தவிக்கும் மக்களாக இந்நாட்டில் லட்சக்கணக்கான மக்கள் தற்போது அரசாங்க எதிர்ப்பு, வெறுப்பு, அரச எதிர்ப்பு உணர்வுகளை சமூகமயப்படுத்தி வருவதாக தெரிவித்த தொழிற்சங்க தலைவர், இந்த மக்களின் அடிப்படைத் தேவைகளுக்குத் தீர்வுகளை வழங்காத வரையில், அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தால் முன்னெடுக்கப்படும் அரச எதிர்ப்பு தான் இது என்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அந்த மக்கள் அரசாங்கத்துக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க அடிப்படை உரிமை உள்ளது என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். எனவே, அனைத்து ஒழுங்கற்ற குறைபாடுகள் இருந்தபோதிலும், மார்ச் 31 அன்று நடந்த போராட்டத்தை பொலிஸும் பாதுகாப்புப் படையினரும் தமது பலத்தைப் பயன்படுத்தி அடக்கினர்.

பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் மீதான தாக்குதல் குற்றச்சாட்டுகள் உட்பட போராட்டங்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவை ஊழியர்களால் கண்டிக்கப்பட்டது.

# உலகின் மிகவும் பலவீனமான நாணயமாக இலங்கை ரூபா!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மோசமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை கட்டுப்படுத்த போராடி வரும் நிலையில், இலங்கை ரூபாவின் மதிப்பு, உலகின் மிகவும் பலவீனமான நாணயமாக இலங்கை ரூபா மாறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பினான்ஸியல் டைம்ஸ் ஒவ் இன்டியா வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ரூபா அமெரிக்க டொலருக்கு நிகராக 300 ரூபாவைத் தாண்டியுள்ளது. ரஷ்யாவின் ரூபிள் கூட பின்தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடனை செலுத்துதல், பரவலான எதிர்ப்புகள் மற்றும் பொருளாதார அவசரநிலை ஆகியவற்றுடன் அதன் அரசாங்கம் போராடுவதால், இலங்கை அந்நிய செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

கடுமையான உணவு தட்டுப்பாடு, மின் தட்டுப்பாடு மற்றும் பணவீக்கம் காரணமாக நாடு தழுவிய போராட்டங்களைத் தொடர்ந்து நாட்டின் முழு அமைச்சரவையும் வார இறுதியில் இராஜினாமா செய்திருந்தன.

இவ்வாறான நிலையில், உலகின் மிகவும் பலவீனமான நாணயமாக இலங்கை ரூபா மாறியுள்ளதாக பினான்ஸியல் டைம்ஸ் ஒவ் இன்டியா செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் அரசாங்கம் கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியைக் கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்க டொலரொன்றின் விற்பனைப் பெறுமதி 308 ரூபா 49 சதமாக அதிகரித்துள்ளது. அத்துடன் டொலரின் கொள்முதல் பெறுமதி 298 ரூபா 10 சதமாக பதிவாகியுள்ளது. யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 327 ரூபா 70 சதமாகவும், விற்பனை பெறுமதி 339 ரூபா 07 சதமாகவும் காணப்படுகிறது. – என்று தெரிவித்துள்ளது.

# அமைச்சருக்குரிய அதிகாரபூர்வ வாகனங்களை ஒப்படைக்காது பதவி விலகிய அமைச்சர்கள்

பதவி விலகிய அமைச்சர்கள் இன்னமும் அதிகாரபூர்வ வாகனங்களை ஒப்படைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர்கள் பதவி விலகியிருந்தனர்.

எனினும் இந்த அமைச்சர்கள் அதிகாரபூர்வ வாகனங்களை தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்கள் பதவி விலகிய நிலையில் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்றி, 24 மணி நேரம் கூட புதிய பதவியில் நீடிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விவசாயத்தில் சேதன உரத்தை பயன்படுத்தி உரிய விளைச்சலைப் பெற முன்வரவேண்டும்!

## முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு



அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக எதிர்காலத்தில் நோயற்ற வாழ்வுடைய சமூகமொன்றை உருவாக்கும் பொருட்டு விவசாயத்தில் சேதன உரத்தைப் பயன்படுத்தி உரிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ள அனைவரும் முன்வரவேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழுள்ள வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக பயிர் செய்கை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீர்பாசனத்திணைக்களத்தின் கீழுள்ள வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கான பங்கீட்டு கூட்டமானது வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அங்கு கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் –

தற்போது அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக எதிர்காலத்தில் நோயற்ற வாழ்வுடைய சமூகமொன்றை உருவாக்கும்பொருட்டுவிவசாயத்தில் சேதன உரத்தைப் பயன்படுத்திஉரியவிளைச்சலைப் பெற்றுக்கொள்ள அனைவரும் முன்வரவேண்டும். – எனத் தெரிவித்தார்.

இந்த வருடம் வவுனிக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்காக 2142 ஏக்கர் இடதுகரையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் விநாயகர்புரம் 700 ஏக்கர், பொன்னகர் 44 ஏக்கர், பூவரசங்குளம் 650 ஏக்கர், கரும்புள்ளியான் 270 ஏக்கர், பாண்டியன்குளம் 478 ஏக்கர் செய்கை பண்ணப்படவுள்ளது.

மேலும் வயற் செய்கைக்கான நீர் பங்கு விநியோகம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இதனைவிட முக்கிய தீர்மானமாக இனி வருங்காலங்களில் கண்ட முறையிலும் வாய்க்கால்கள் அடிப்படையிலும் சிறுபோகம் மேற்கொள்ளப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர்கள், மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கமநல காப்புறுதிச் சபையின் உதவிப்பணிப்பாளர், மாவட்ட நீர்வாழ் உயிரின வள விரிவாக்கல் உத்தியோகத்தர், மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களம், மாவட்ட வனத்துறை உத்தியோகத்தர், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கோட்டா அரசால் இயற்றப்படும் சட்டமூலங்களை செல்லுபடியற்றதாக்க மக்கள் தயாராக உள்ளனர்

## மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.அமைப்பாளர் தெரிவிப்பு

மூன்றிலிரண்டு பெரும்பான்மை எமக்கு இருக்கின்றது என கூறி மக்கள் குரலுக்கு செவிமடுக்காது அமைச்சர்களுக்கு செவிமடுக்காது தான்தோன்றித்தனமாகவும் தன்னிச்சையாகவும் முடிவு எடுக்கின்ற கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் இன்று அறுதிப் பெரும்பான்மையையும் இழந்து போயுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகரம் தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இ.சந்திரசேகரம் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தற்போது முன்மொழியப்படுகின்ற இடைக்கால அரசாங்கம் என்பது பொய்ப்பித்தலாட்டமே. நாட்டை மோசடி செய்தவர்களும் அவர்களது குடும்பங்களும் வெளியேற வேண்டும் என்று மக்கள் கூறுகின்றனர். கடந்த காலத்தில் மோசடியில் ஈடுபட்டவர்களும் அதற்குத் துணைபோனவர்களையும் மீண்டும் அமைச்சர்களாக நியமிப்பதன் மூலமாக அரசாங்கம் எதற்கும் தீர்வைக் காண முடியாது.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை எமக்கு இருக்கின்றது எனக் கூறி மக்கள் குரலுக்கு செவிமடுக்காது அமைச்சர்களுக்கு செவிமடுக்காது தான்தோன்றித்தனமாகவும் தன்னிச்சையாகவும் முடிவு எடுக்கின்ற கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் இன்று அறுதிப் பெரும்பான்மையையும் இழந்து போயுள்ளது.

தங்கள் குடும்பம் போடும் தாளத்துக்கு நாட்டில் மக்கள் அனைவரும் ஆட வேண்டும் என்ற மனநிலையில் இருந்தபோது, அனைத்தும் உடைந்து சிதைந்து சுக்குநூறாகி நிலைமையே ஏற்பட்டுள்ளது.

நாம் கோட்டாவால் முடியாது என்று இன்றல்ல ஒரு வருடத்திற்கு முன்பே சொன்னோம். அதை மேலும் வலுப்படுத்தும் வகையில் மக்கள் இன்று கோட்டா கோ கோம் எனக் கூறுகின்றனர். கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்குப் போக வேண்டிய காலகட்டம் வந்திருக்கின்றது இனியும் உங்களால் முன்னெடுக்கப்படுகின்ற எந்த ஒரு சட்ட மூலத்தையும் செல்லுபடியற்றதாக மாற்றுவதற்கு மக்கள் தயாராக இருக்கின்றார்கள். அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் என்பது தற்போது பின்வாங்கப்பட்டிருக்கிறது. – என்றார்.

# நூதனமான முறையில் சங்கிலி யாழில் அறுப்பு!

யாழ்.வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வழக்கம்பரை தொல்புரம் பகுதியில் மிகவும் நூதனமான முறையில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள வீட்டின் படலைக்கு அருகே இருந்த பெண்மணி ஒருவரிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சாத்திரம் சொல்லும் கோவில் எங்கு உள்ளது எனக் கேட்டவேளை அவர்களுக்கு வழி சொல்வதற்கு அந்த பெண்மணி அருகில் வந்துள்ளார்.

இதனையடுத்து அந்தப் பெண்மணியினது கழுத்தில் இருந்த இரண்டு பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு இருவரும் அங்கிருந்து தப்பித்துச் சென்றனர்.

மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்தவர் கோயிலுக்கு செல்வது போல கையில் வாழை இலையும் பூஜைப் பொருள்களும் வைத்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சி.சி.டி.வி காட்சிகளின் அடிப்படையில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வசந்த கரன்னாகொடவின் ரிட் மனு ஜூன் விசாரணை

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வானில் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக்கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில், கொழும்பு, ட்ரயல் அட்பார் விசேட நீதிமன்றில் முன்னாள் கடற்படைத் தளபதி அத்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றப் பத்திரம் மீதான வழக்கின் விசாரணைகளை நிறுத்துமாறு கோரி அவரால் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அம்மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் ஜூன் 27 ஆம் திகதி முன்னெடுக்க மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது.

மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான டி.எம். சமரகோன் மற்றும் ஷி மகேந்திரன் ஆகிய நீதிபதிகள் இதற்கான தீர்மானத்தை அறிவித்தனர்.

இம்மனு விசாரணைக்கு வந்த போது, சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நரின் புள்ளே, இந்த விவகாரத்தில் பல ஆவணங்களை சமர்ப்பிக்க அவகாசம் வழங்குமாறு கோரினார். அதற்கு அனுமதியளித்தே மனு இவ்வாறு ஜூன் 27 வரை ஒத்தி வைக்கப்பட்டது.

# மக்களின் அபிலாஷைகளுக்கு அரசு மதிப்பளிக்காவிடின் பெரமுனவின் பின்வரிசையினர் தீர்க்கமான முடிவெடுப்பர்

## அக்கட்சியின் ஜகத் குமார எம்.பி. எச்சரிக்கை

நாட்டு மக்கள் எதிர்க்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் நடைமுறைக்கு பொருத்தமானத் திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

மக்களின் அபிலாஷைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்காவிடின் பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசியல் ரீதியில் உறுதியான தீர்மானத்தை மேற்கொள்ள நேரிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமை தொடர்பாக வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு பெற்றுக்கொடுக்காத காரணத்தால் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டம் ஈடுபட்டுள்ளார்கள்.

மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிறேன். அரசாங்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் பாரிய குறைப்பாடுகள் காணப்படுகின்றன.

சிறந்த நோக்கத்துடன் ஜனாதிபதி முன்னெடுத்த தீர்மானங்கள் ஒருசிலரால் அரசு பலவீனப்படுத்தப்பட்டுள்ளன, சேதன பசளைத் திட்டத்தை உரிய தரப்பினர் விவசாயிகள் மத்தியில் முறையாக கொண்டு செல்லவில்லை.

பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள போது மக்களின் வெறுப்பை மேலும் தூண்டி விடும் வகையில் ஆளும் தரப்பினர் கருத்துரைத்தமை தற்போதைய நெருக்கடிகளுக்கு பிரதான காரணியாக அமைந்துள்ளது. நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய எதிர்தரப்பினரது ஒத்துழைப்பு அவசியமானது. பெரும் ரன்மை பலம் உள்ளது என்பதற்காக அனைத்தையும் சாதித்து விட முடியாது.

மக்களின் கருத்துகளுக்கும், அபிலாஷைகளுக்கும் அரசாங்கம் மதிப்பளிக்காவின் பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியலில் ரீதியில் உறுதியான தீர்மானத்தை முன்னெடுப்போம்.

எம்மைத் தெரிவு செய்த மக்களின் பக்கம் இருந்து அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. மக்கள் எம்மை நோக்கி எழுப்பும் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத அவல நிலைமை தற்போது தோற்றம் பெற்றுள்ளது. – என்றார்.

# எட்டாம் தரம் சித்தியடைந்துள்ள இராணுவத்தை மக்கள் போராடும் இடங்களுக்கு அனுப்பக்கூடாது

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இப்படிக் கருத்து

மக்கள் போராட்டங்களில் ஈடுபடும் இடங்களுக்கு இராணுவத்தினர் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இராணுவத்தில் உள்ள பலர் எட்டாம் தரம் சித்தியடைந்தவர்கள். இவர்கள் ஆவேசப்பட்டு ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபட முடியும், எனவே இதனை நிறுத்த வேண்டும் எனவும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற அமர்வுகள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய வேளையில் நாடாளுமன்ற சுற்றுவட்டத்தை முற்றுகையிட்டு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது முகமூடி, சீருடை அணிந்து, பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிள்களில் துப்பாக்கிகளுடன் நுழைந்தவர்கள் யார் என்ற கேள்வி எதிர்க்கட்சியினரால் எழுப்பப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் சரத் பொன்சேகா–

இலக்கத்தகடுகள் இல்லாத, பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிள்களில் ஆயுதத்துடன் இராணுவம் வருவதை எம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. யார் எவர் என்பது வேறு விடயம். அது தொடர்பில் விசாரணைகளை நடத்த வேண்டும்.

அதேபோல் இராணுவச் சீருடையில் உள்ள ஒருவரைப் பொலிஸார் தாக்குவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இராணுவம் பொலிஸாரை தாக்கினாலும் அதற்கும் நான் எதிராகவே கருத்துக்களை முன்வைப்பேன். எவ்வாறு இருப்பினும் மக்கள் போராட்டங்கள் நடக்கும் இடங்களுக்கு இராணுவத்தினர் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அப்படியான நேரங்களில் எவரேனும் ஒருவர், இராணுவ வீரரிடம் இருக்கும் துப்பாக்கியை பிடிங்கி, இராணுவத்தினரை நோக்கி சுடக்கூடும் என்பதே இதற்கு காரணம் எனவும் அப்போது நிலைமை விபரீதமாக மாறும்.

எனவே, இது தொடர்பில் ஆராயப்பட வேண்டும். இலக்கத்தகடுகள் இல்லாது இராணுவம் ஆயுதத்துடன் வந்தமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. எவரேனும் இவ்வாறான சம்பவங்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றன. இராணுவத்தில் உள்ள பலர் எட்டாம் தரம் சித்தியடைந்தவர்கள்.

இவர்கள் ஆவேசப்பட்டு ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபட முடியும். ஆகவே இது தொடர்பாக சுயாதீனமாக விசாரணைகளை நடத்தி கட்சி பேதம் இல்லாது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இராணுவம் தவறு செய்திருந்தால் அதற்கு எதிராக இராணுவத் தளபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் மேற்படி பொலிஸார் தவறு செய்திருந்தால் அதற்கும் எதிராக பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

# பிராந்திய தொற்று நோயியலாளர் வைத்தியர் லவன் உயிரிழந்தார்

## வவுனியாவில் விபத்தில் பரிதாபம்

வவுனியா பிராந்திய தொற்று நோயியலாளர் வைத்தியர் லவன் விபத்து காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு உயிரிழந்துள்ளார். இவர் வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் தொற்று நோயியலாளராகவும், மாவட்ட கொவிட் கட்டுப்பாட்டு செயலணி உறுப்பினராகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வீட்டில் ஏற்பட்ட விபத்து ஒன்றின் போது தலையில் பலத்த காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி தனது 58 ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.

# அடுத்த அரசும் தமிழர் தரப்பும்

தென்னிலங்கை அரசியலின் போக்கைப் பார்த்தால், நாடு ஆட்சி மாற்றத்திற்குத் தயாராகி வருகிறது. இதில் வேதனையான விடயம் என்னவென்றால், பொருளாதார நிலைமையை முன்னிறுத்தி, மக்கள் போராட்டம் என்று கூறிக் கொண்டே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா உள்ளிட்டோர், தேசிய அளவிலான விவாதத்தை திசை திருப்பி வருகின்றனர். அதிலும் குறிப்பாக, நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பது என்பன போன்ற அரசியல் கோரிக்கைகளை முன்னிறுத்தி, நாடாளுமன்றத்தில் பேசி வருகின்றனர். இவை எல்லாம், பொருளாதார பிரச்சினைகளை இல்லாதாக்கி விடாது, அல்லது அவற்றிற்கான முடிவுகளை தந்துவிடாது.

இது சிங்கள எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களுக்கு தெரியாத விடயமல்ல. ஆனால், அவர்களிடமும், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க எந்தத் திட்டமும் இல்லை. அதனால்தானோ என்னவோ, அதனை அரசியல் ஆக்கி, மக்கள் போராட்டத்தை, தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப திசை திருப்பி விட்டார்கள். அதிலும் குறிப்பாக, அவர்களில் பொருளாதாரம் தெரிந்த ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமநாயக்க போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்னுக்கு தள்ளப்பட்டு, முற்று முழுவதுமாக, அரசியல் மட்டுமே பேசு பொருளாகி விட்டது.

இன்னும் சொல்லப் போனால், கடந்த நாள்களில், நாடாளுமன்றத்தில் அரங்கேறிய விவாதங்களால், வெளியே தவிக்கும் மக்களுக்கு எந்த விதத்திலும் உடனடி நிவாரணம் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, இடைப்பட்ட காலத்திலும் பயன் கிடைக்கப் போவதில்லை என்றே தோன்றுகிறது. எப்பொழுது, குறிப்பாக சஜித் பிரேமதாஸா தலைமையிலான மக்கள் சக்தி கட்சி, நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பது போன்ற தொனிப்பொருளில் பேசத் தொடங்கி விட்டனரோ, அப்போதே வயிற்றில் ஈரத் துணியைப் போட்டுக் காத்திருக்கும் மக்கள், அதனை நனைத்து மறுபடியும் வயிற்றில் போட்டுக் கொள்ள வேண்டியதுதான் என்ற நிலைமை வந்து விட்டது.

காரணம், பிற வேலைகளை எல்லாம் தள்ளி வைத்து விட்டு, நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியை, முடிந்தால் நாடாளுமன்றம் இந்த வாரமே ஒழித்து விட வேண்டும் என்று சஜித் கூறியுள்ளார். முதலில், அவ்வாறு செய்ய மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவை. இன்னமும் பதவியில் ஒட்டிக் கொண்டோ அல்லது தொடங்கிகொண்டோ இருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கான குறைந்த பட்ச ஆதரவு கூட அவர்களுக்கு இருப்பதாக தெரியவில்லை. இத்தகைய சூழ்நிலையில், மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு என்பது, இப்போதைக்கு கிடைக்கப் போவதில்லை.

இது போதாது என்று, நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட்டு அதில் வெற்றியும் பெற வேண்டும். அதற்கு உரிய கால அவகாசம் வேண்டும். அந்த காலகட்டத்தில், அரசியல் யாப்பின் அடிப்படையில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றில் கூறியமை போல் இடைக்கால அரசு அமைக்க இடமில்லை. மன்றத்தில் கஜேந்திர குமார் பொன்னம்பலம் சுட்டிக் காட்டியமை போல், இன்றுள்ள சூழலை கையாளும் விதமாக அரசியல் யாப்பில் எந்தவொரு பிரிவும் இல்லை.

அவ்வாறானால், பிரதமர் மஹிந்தா தலைமையிலான அரசைத் தோற்கடித்து விட்டு, புதிய பிரதமரை நியமிக்க ஜனாதிபதியை நிர்ப்பந்திக்கும் விதமாக, அரசிற்கு எதிரான உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றலாம். இன்றைய நிலைமையில் அதற்கான எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது என்றே தோன்றுகிறது.




## அக்கரை / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

### அதிரடி முடிவு

அதை விட முக்கியம், மாற்று அரசு அமைப்பது குறித்து ராஜபக்ஷக்களை எதிர்க்கும் கட்சிகளுக்கு இடையே ஒற்றுமை இல்லை. ஏன், அரசிற்கான ஆதரவை திரும்ப பெற்றுக் கொண்டுள்ள 42 நாடாளுமன்ற உறுப்பினர்கள், மூன்று, நான்கு அணிகளாகப் பிரிந்து இருக்கிறார்கள். இவர்களில் ராஜபக்ஷ குடும்பச் சொத்தான பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்து சென்ற 12 நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலருக்கும் தங்களது சொந்த ஆதங்கம் மட்டுமே உள்ளது.

உதாரணத்திற்கு, அனுரா பிரியதர்ன யாப்பா, சுதர்ஷினி பெர்னாடோபுள்ளே போன்றோர் அமைச்சரவையில் தங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்று கருதி இருப்போர். இவர்களில், சுதர்ஷினி, கணவர் ஜெயராஜ் பெர்னாடோபுள்ளே, விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட பிறகு, அன்று ஜனாதிபதியாக இருந்த மஹிந்தவால் அரசியலுக்கு கொண்டு வரப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சராக ஆக்கப்பட்டவர். இவர்களில், எத்தனை பேர், கோட்டாவையோ, மஹிந்தவையோ அழைத்து கன மான அமைச்சு பதவிகளை அளித்தால் திரும்பி தாய்க் கட்சிக்கே போக மாட்டார்கள் என்பதற்கு எந்த வித உத்தரவாதமும் இல்லை.

இதுவே கூட சுதந்திரக் கட்சியின் பதினான்கு உறுப்பினர்களில் சிலருக்கும் பொருந்தலாம். பிரச்சினையே, முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவை, அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளாததில் தான் தொடங்கியது. ஆனால், இன்றைய சூழலில், ராஜபக்ஷக்களுக்கு எதிரான மக்களின் மன நிலையில், சுதந்திரக் கட்சி முழுவதுமே அவர்களுடைய ஆட்சிக்கு உடன் தானே மீண்டும் ஆதரவு அளிக்க மாட்டார்கள் என்று நம்பலாம்.

அது போன்றே, இந்த நியாயம், 'வீரவன்ஸ. கம்மன்பில கைவசம் உள்ள பதினாறு எம்.பிக்களுக்கு பொருந்துமா?' என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். குறிப்பாக, விமல் வீரவன்ஸ் மற்றும் வாசுதேவ நாணயக்காரா போன்றோரின் இடதுசாரி கருத்துக்கள், மக்கள் சக்தியின் பொருளாதார கொள்கைகளோடு ஒத்து போகாது. என்றாலும், அவர்களும் சரி, ஜே.வி.பி.யும் சரி, மாற்று அரசிற்கு, பிரச்சினைகளின் அடிப்படையில், வெளியில் இருந்து ஆதரவு கொடுக்கலாம்.

தற்போதுள்ள சூழலில், மக்கள் சக்தியின் உள்ளேயே, இது போன்ற பச்சோந்திகளை தங்கள் பக்கம் சேர்த்துக் கொள்ள கூடாது என்று அழுத்தம் இருக்கிறது. போததற்கு, இந்த மக்கள் போராட்டத்தை முன்னெடுத்த சிவில் சமூக அமைப்பினரின் கொள்கைகளுக்கு இது பொருந்தாமையால், சஜித் அவர்கள் விடயத்தில் உடனடியான அதிரடி முடிவுகள் எதனையும் எடுத்து விடமுடியாது.

### அற்ப ஆயுள்

இது இவ்வாறிருக்க, மூட நம்பிக்கைகளில் நம்பிக்கை உள்ளவர்களிடம் கேட்டால் இவ்வாறு சொல்வார்கள்:- இனப்போர் முடிந்த காலம் துவங்கி, இன்று வரை, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எந்த அரசு முயற்சி செய்தாலும், அல்லது அவ்வாறு பாவனை செய்தாலும், அதன் ஆட்சிக் காலம், அற்ப ஆயுளில் முடிந்து விடும். இவர்களில் ஒரு சிலராவது, இது போராளிகளின் சாபம் என்றோ, அவர்களது ஆவியின் பழிவாங்கும் செயல் என்றோ கூட வாதிடலாம். இது வரை அவர்கள் இவ்வாறு கதை கட்டவில்லை என்றால், இனி மேல் அதனை துவங்கலாம். அதற்கான வாய்ப்புகள் நிரம்பவே இருக்கின்றன.

இனப்போர் முடிந்த காலகட்டத்தில் அன்றைய மஹிந்த ராஜபக்ஷ அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசியல் தீர்வு குறித்து பேச்சுவார்த்தைகளை துவங்கியது. அந்த பேச்சுவார்த்தைகள் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கும் போது, அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகள், பொறுப்புக் கூறல் மற்றும் போர் குற்றங்கள் என்ற அடிப்படையில் இலங்கை அரசிற்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றின.

இது போதாது என்று, அன்றைய மன்னார் ஆயர், காலம் சென்ற ஜோசப் ராயப்பு ஆண்டகை தலைமையில் ஒரு சிவில் சமூக அமைப்பு வேறு, கூட்டமைப்பிற்கு அவசியமில்லாத அழுத்தங்களை கொடுத்தது. மொத்தத்தில், அந்த பேச்சு வார்த்தை பாதியிலேயே காணாமல் போனது. இன்று, இரு தரப்பினருமே அதுகுறித்துபேசுவதற்குதயங்குகின்றனர்.

இது இவ்வாறு என்றால், பின்னர் வந்த ரணில் ஆட்சியில், புதிய அரசியல் யாப்பு மற்றும் தமிழர் தரப்பிற்கான அரசியல் தீர்வு ஆகியவை ஆளும் கூட்டணியின் தேர்தல் வாக்குறுதியாக முக்கியத்துவம் பெற்றிருந்தன. கொடுத்த வாக்குக்கு இணங்க, ரணில் தலைமையும், அரசியல் தீர்வு உள்ளடக்கிய புதிய யாப்பு நகலை தயார் செய்தது. ஆனால், அதனை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் முன்னரே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா - ரணில் உறவு அதல பாதாளத்திற்கு சென்றிருந்தது. அதன் பின்னர், கூட்டமைப்பு உட்பட எந்த ஒரு தரப்பும் புதிய யாப்பு குறித்தோ, அரசியல் தீர்வு குறித்தோ வாய் திறக்கவில்லை.

### ஒரு நாள் கூத்து

அண்மைக்காலத்தில், ஜனாதிபதி கோட்டாபய, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முதல் முறையாக நேரடி பேச்சுவார்த்தைகளை துவங்கினார். அரசியல் தீர்வு குறித்து, தனது அரசிற்கு கிடைத்துள்ள புதிய வரைவு யாப்பின் அடிப்படையில் இன்னும் இரண்டு மாதங்களில் தனியாக பேசலாம் என்று கூறினார்.

(09ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# வாழக் கற்போம்!





இறைவன் படைப்பில் ஒரு சிறு அங்கமாக விளங்குவது மானிட இனம். இம்மானிட இனம் சிறப்புற வாழக் கல்வி ஓர் அற்புத சாதனமாகத் திகழ்கிறது. கல்வித்தாகம் ஒவ்வொருவரின் உயிரோட்டத்திலும் ஊற்றெடுக்க வேண்டிய ஒன்றாகும். இம்மாபெரும் கல்விச் செல்வமானது அனைவரது வாழ்விற்கும் விடிவெள்ளியாக அமைந்து வருகின்றது என்றால் மிகையாகாது. கண்களுக்கு நிகராகப் போற்றப்படும் கல்வியைக் கற்பதன் வழி, ஒரு மனிதன் தன் வாழ்வைச் சீர்படுத்திக் கொண்டு செம்மையாக வாழலாம்.

உயிர், உடலில் இருந்து பிரிந்தாலும் ஒரு மானிடன் வாழ்ந்த வாழ்வை இவ்வுலகம் தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்கும். அப்பேச்சு, தூற்றும் வகையில் அமைவதும், போற்றும் வகையில் அமைவதும் ஒருவர் கடைப்பிடித்த வாழ்க்கை நெறியைப் பொறுத்துள்ளது. இவ்வாழ்க்கைநெறி கல்வியின் மூலமே பெறப்படுகிறது.

கல்வியானது பண்பு நிறைந்த சமுதாயத்தை உருவாக்கும் வல்லமையைக் கொண்டது. கல்விவழி அன்பு, பணிவு, கருணை போன்ற உயர்ந்த குணங்கள் ஒருவரது ஆழ்மனதில் கலந்துவிடும். அதோடு, கல்வி கற்ற ஒரு மானிடனால் நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து நடக்க இயலும். இதனால், கல்விமானாகத் திகழும் ஒவ்வொரு மனிதரும் என்றும் மாசற்றவர்களாகத் திகழ்வர் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

மேலும், கல்வித் தென்றலில் உலாவரும் ஒவ்வொரு மனிதனும், மதிப்பும் மரியாதையும் பெற்று புகழின் சிகரத்தை அடைவான் என்பது நாமறிந்த ஒன்றே. கல்வி ஞானம் பெற்ற ஒருவரின் பேச்சும் ஆலோசனையும் மட்டுமே உலக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழ்வில் செயல்படுத்தப்படுகின்றது. ஏனெனில், கற்றவரின் கருத்து என்றும் வளமானதாகவும் வலுவானதாகவும் இருக்கும். கற்றவர்கள் எவ்வித சிக்கல்களையும் தங்கள் அறிவால் சுமுகமாக நிவர்த்தி செய்யும் ஆற்றலைப் பெற்றிருப்பர். அதோடு, கற்றவர்கள் எவ்வித சூழ்நிலைகளிலும் தன்னடக்கத்துடன் செயல்படுவர். இதுபோன்ற சிறந்த தன்மைகளைக் கொண்டிருப்பதால் கற்றவர்கள் சென்ற இடமெல்லாம் சிறப்பிக்கப்படுவர் என்பதைக் 'கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்னும் முதுமொழி விளக்குகின்றது.

கல்வி என்னும் அமுதச் சுரபியைப் பெறும் ஒவ்வொரு மானிடனும் தனது பொது அறிவை வளர்த்துக் கொள்ள இயலும். கல்வி கற்கும் பொழுது நாம் அதன் வழி பல தகவல்களை அறிகின்றோம். இத்தரணி தோன்றியது முதல் மனிதன் வளர்ச்சி அடைந்த காலம் வரை உள்ள தகவல்களை நாம் கல்வியின் வழி கற்றறியலாம்.

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு**

- என்னும் குறளுக்கேற்ப கல்வி கற்கக் கற்க நமது அறிவு முதிர்ச்சி அடைந்து நாம் ஒரு சிறந்த அறிவாளியாக உருவாகலாம்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# சுத்தம் சுகம் தரும்



அன்பானவர்களே! நாம் வாழும் வாழ்க்கை, நமக்குச் சுகமாக அமையவேண்டும் என்றால் நாம் முதலில் சுத்தமாகவும் சீரோடும் இருக்கப் பழகவேண்டும்.

சுத்தம் பேணுவது என்பது நம்மையும் நாம் பயன்படுத்தும் இடங்களையும் அழுக்கின்றித் தூய்மையாக வைத்திருப்பதுதான்.

சீரோடு இருப்பது என்பது ஒழுங்கு முறையோடு நேர்த்தியுடன் வாழ்வதுதான்.

நாம் சுத்தமாகவும் சீராகவும் இருக்கப் பழகிக் கொண்டால, அதன் பலன் நமக்குச் சுகமாக வந்து சேரும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

நாம் பயன்படுத்தும் இடமாக இருக்கட்டும், பயன்படுத்தும் பொருளாக இருக்கட்டும், அதனைத் தூய்மையாகவும் ஒழுங்குமுறையாகவும் இருக்கும்படி பயன்படுத்தி, நம் தேவை முடிந்தும் அந்த இடத்தினை விட்டுச் செல்லும்போது சுத்தமாகவும் சீராகவும் இருக்கும்படி நாம் பார்த்துக்கொண்டோமேயானால் நிச்சயமாக அதற்கான பலன் உண்டு.

அன்பானவர்களே! சுருக்கமாகச் சொன்னால், நம் தோற்றம் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது, நாம் வாழும் இடமும் நேர்த்தியோடு இருக்க வேண்டும்.

அப்போதுதான் சுத்தம் சுகம் தரும் என்பதன் உண்மை அர்த்தத்தினை நாம் அனுபவத்திலே உணர முடியும்.

இதற்காக எல்லாம் நாம் பெரிய அளவிலே பயிற்சி எடுக்கவேண்டியதில்லை.

சில பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

புத்தகத்தைப் பயன்படுத்திய பின் உரிய இடத்தில் வையுங்கள்.

வீட்டில், எந்தப் பொருளை எடுத்தாலும் பயன்பாடு முடிந்ததும் உரிய இடத்தில் உரிய பொருள்களை வைக்கப் பழகுங்கள்.

காலக்கிரமத்தில் அது உங்களுக்கு இயல்பானதொரு விடயம் ஆகிவிடும்.

இதனை நான் எனது வீட்டில் செய்கிறேன்.

என் செயலால் எனது வீட்டார் மனம் மகிழ்கின்றனர்.

இப்படி நாம் செய்வதால் அது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தரும் என்பது மறுக்க முடியாத உண்மை.

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பார்கள்.

வீட்டுப்பழக்கம் நீங்கள் செல்லும் இடம் வரை தொடரும்.

உங்களின் பழக்கம் ஆரோக்கியமானதாயின் அது உங்களுக்குப் பாராட்டைத் தேடித் தரும்.

மாறாக இருப்பின் மற்றவரின் முகஞ்சுழிப்பிற்கும் நீங்கள் ஆளாவீர்கள்.

ஏனென்றால் நாம் சுத்தமாகவும் சீராகவும் இருப்பதையே அனைவரும் விரும்புவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் எல்லோருக்கும் மேலான இறைவனும் தூய்மையான இடத்திலேயே விரும்பி உறைவார்.

அன்பானவர்களே! விலங்குகளைக் கவனித்துப் பாருங்கள்.

அவை தம்மைத்தாமே சுத்தமாக வைத்திருக்கின்றன அல்லவா?

மனிதர்களாகிய நாம் எம்மையும் நாம் வாழும் சூழலையும் சுத்தமாக வைத்திருப்பதென்பது கஷ்டமான காரியம் இல்லைத்தானே!

அன்பானவர்களே! நாமும் சுத்தம் பேணுவோம் - சுகமாக வாழ்வோம்.

**- குணரட்ணம் சுதாகரன் -**
**(அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**இந்து சமய, கலாசார அலுவல்கள்**
**திணைக்களம்**
**நாவலர் மணி மண்டபம், நல்லூர்)**

# கோளறு பதிகம்



பாடல் - 08

**வேள்பட விழிசெய்துஅன்று விடைமேல் இருந்து**
**மடவாள் தனோடும் உடனாய்**
**வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்**
**இடரான வந்து நலியா**
**ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே**

**பொழிப்பு :-**

அன்று தவத்தைக் கலைக்கிறேன் என்று கரும்புவில், மலரம்போடு வந்தவனான மன்மதனை, மூன்றாவது கண்ணை மெல்லத் திறந்து எரித்தவரும், வெள்ளை எருது மேல், அன்னை சிவகாமியோடு அமர்ந்தவரும், ஒளிமிகுந்த சந்திரனையும் வன்னியிலை, கொன்றை மலர் எனச் சடைமுடியிற் சூடியவருமான சிவப்பரம்பொருள் என் உள்ளமெனும் குகையில் வந்து அமர்ந்ததனால் ஏழு கடலும் சூழ்ந்த இலங்கைத் தீவை ஆளும் அரசனான இராவணனோடு, பிற அரக்கர்களாலும் எந்த இன்னல்களோ, தீங்கோ, கஷ்டங்களோ, துன்பங்களோ அண்டாது, ஆழக் கடல் கூட அமைதிக் கடலாகவே இருந்து செல்வங்களைத் தருமேயன்றிக் கெடுதல் எதுவுமே செய்யாது, சிவனடியார்களான எமக்கு நல்லன, நல்லன, மிக நல்லன நல்லனவே அவை செய்யும்.

**ஓவியமும் விளக்கமும்: பத்மவாசன்**
**(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து)**

காலைக்கதிர் Kalaikkathir

# அம்பாந்தோட்டை பகுதியில் மர்மமாக இரட்டைக் கொலை!

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் இருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொலை சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர்கள் அம்பலாந்தோட்டை மற்றும் சூரியவெள பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வாகன விபத்தில் இந்த மரணங்கள் இடம்பெற்றுள்ளன என்று உண்மைகளை மூடி மறைக்க முற்பட்டுள்ளன எனப் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அம்பாந்தோட்டை மாமடல பிரதேசத்தில் மாடுகள் இரண்டை அழைத்துச் செல்ல வந்த இருவருக்கும் மாட்டு உரிமையாளருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அம்பாந்தோட்டை மாமடல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி அங்குனகொலபெலஸ்ஸ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இவர்களை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது கூறியமை போன்று மாமடல – ரத்னவீர பாலத்திற்கு அருகில் விபத்து ஏதும் இடம்பெறவில்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் பல விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

# கரைச்சி பிரதேச சபையில் மரக்கறிகளுக்கான கழிவுகள்



கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கிளிநொச்சி பொதுச் சந்தையில் இது வரை காலமும் பின்பற்றி வந்த மரக்கறி உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை சந்தையில் விற்பனையாளர்களுக்கு வழங்கும் போது 10றஇற்கு 1 (10:1) என்கிற வீதத்தில் வழங்கப்பட்டு வந்த கழிவு வீதம் எதிர்வரும் 09.04.2022 சனிக்கிழமைக்கு பின்னர் அவை நீக்கப்படும் என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் பிரச்சினை மற்றும் உரப்பிரச்சினைகளுக்கு மத்தியில் விற்பனையாளர்கள் அரும்பாடுபட்டு செய்கின்ற உற்பத்திப்பொருள்களைக் கொண்டு வந்து பொதுச் சந்தையில் விற்கும்போது அவர்களுக்கு 10:1 எனும் கழிவு வீதத்தில் வழங்கும் போது உற்பத்தியாளர்களுக்கு ஏற்படுகிற நட்டம் தொடர்பில் கிளிநொச்சி சேவைச் சந்தையின் நிர்வாகத்தினருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட முடிவு எடுத்துள்ளோம் எனவும் அத்துடன் எதிர் வரும் சனிக்கிழமை புது வருடத்தினை முன் னிட்டு மரக்கறி உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருள்களை சந்தையில் விற்பனை செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அடுத்த அரசும் தமிழர் ........

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதுள்ள நிலைமையில், அந்த வரைவே அர்த்தமில்லாமல் போய்விட்டது என்றே கருத வேண்டும்.

அதை விட கொடுமை, அரசியல் கைதிகள் விடயத்தில், கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரனும், (அன்றைய) நீதி அமைச்சருமான அலி சப்றியும் கலந்து பேசி ஜனாதிபதிக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவர் என்றும் முடிவ செய்யப்பட்டது. ஆனால், தற்போது, அலி சப்றி, நீதி அமைச்சகத்தை மட்டுமல்ல, அரசையே விட்டுச் சென்றுள்ளார்.

ஒரு நாள் கூத்துக்கு நிதி அமைச்சராக பதவியேற்றுக் கொண்ட அவர், அடுத்த இருபத்தினான்கு மணித்தியாலங்களுக்குள் அந்த பதவியை ராஜினாமா செய்துள்ளார். அது மட்டுமல்ல, தனது தேசிய பட்டியலிலான நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமாச் செய்யத் தயாராக இருக்கிறேன் என ஜனாதிபதியிடம் கடிதம் மூலமாக தெரிவித்துமுள்ளார்.

இனி, எப்போது, நிலையான அரசு அமையப் போகிறது என்று தெரியவில்லை. அது இந்த அரசாகவே இருக்கலாம். அல்லது, புதியதொரு அரசு அமையலாம். எதுவாக இருந்தாலும், இனப்பிரச்சினை கிணற்றில் போட்ட கல்லாக இருப்பது தவிர்க்க முடியாததாகி விட்டது என்பதே உண்மை. அந்த வகையில், 'அடுத்த நீதி அமைச்சர் யார்?' அல்லது 'புதிய யாப்பின் வரைவு வெளியிடப்படுமா?' என்பன போன்ற கேள்விகளுக்கு விடை கிடைக்கப் போவதில்லை.

### தனியாவர்த்தனம்

இந்த நிலையில், புதிய அரசியல் சதுரங்கத்தில், தமிழர் தரப்பின் காய் நகர்த்தல்கள் எவ்வாறு இருக்கப் போகின்றது? இது கூட்டமைப்பு மட்டும் சார்ந்த விடயமல்ல. அல்லது கூட்டமைப்பின் உள்ளேயே தனியாவர்த்தனம் வாசிக்கும் ரெலோ போன்ற கட்சிகளின் முடிவு மட்டுமாகவும் இருந்துவிடக் கூடாது. இதுவே, கூட்டமைப்பின் பிற கட்சிகளுக்கும், பிற தமிழர் கட்சிகளுக்கும் பொருந்தும்.

இந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சுமந்திரன், சாணக்கியன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர், பொருளாதாரப் பிரச்சினைகளை விட்டுவிட்டு, இனப்பிரச்சினை பற்றிய அரசியல் குறித்து பேசி, சிங்கள தரப்பினரையும் அந்த மக்களையும் சாடினார்கள். இவர்களில், சுமந்திரன் மட்டுமே, பொருளாதார பிரச்சினைகளை கோடிட்டு காட்டிவிட்டுப் பின்னர் இன அரசியல் மற்றும் பொது அரசியல் குறித்து பேசினார் எனலாம்.

முந்தைய தருணங்களில் தமிழர் தரப்பு இவ்வாறு எல்லாவித நாடாளுமன்ற விவாதங்களிலும் இனப்பிரச்சினை குறித்து மட்டுமே பேசி வந்தமை தவறான முன்னுதாரணமாகக் கருதப்பட்டது. ஆனால், இந்த முறை, முக்கிய தென்னிலங்கை கட்சிகளும் கூட பொருளாதார நிலையை அடியோடு மறந்து விட்டு, அரசியல் மட்டுமே பேசியமை குறிப்பிடத்தக்கது. ஆனால், அதுவே, தமிழர் தரப்பு வாத முறைகளை நியாயப்படுத்தி விடாது என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்று வரை, தேசிய அளவில், பொருளாதாரப் பிரச்சினையை முன்னிறுத்தி அனைத்துக் கட்சி ஆலோசனை கூட்டங்களை நடத்தி, அதன் முடிவுகளை அறிவித்தவர், கூட்டமைப்பின் சுமந்திரன் மட்டுமே. மக்கள் சக்தியில் நிரம்பவும் பொருளாதாரம் அறிந்த முன்னாள் அமைச்சர்கள் இருந்தாலும், அவர்களும் வெறும் வாய்சொல் வீரர்களாக மட்டுமே இருந்தார்கள். சஜித் பிரேமதாஸவோ, பொருளாதாரப் பிரச்சினை அரசியல் போராட்டமாக தெருவிற்கு வருவது வரை, வாயடைத்து மௌனியாகவே இருந்தார்.

இந்தப் பின்னணியில், 'அடுத்து அமைய இருக்கும் அரசில் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழர் தரப்பு பங்கெடுக்க வேண்டுமா?' என்ற கேள்வி எழுகிறது. அது தற்போதைய ஜனாதிபதி கோட்டாவின் தலைமையிலேயே அமையலாம். அல்லது, தற்போதைய நாடாளுமன்றத்தில், எதிர்க்கட்சிகளின் ஒரு கூட்டணி அரசாக இருக்கலாம். அல்லது புதிதாக நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு அதற்குப் பின்னர் அமையும் அரசாக இருக்கலாம். ஏன், கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பதிலாக புதியதொரு ஜனாதிபதி கூட இருக்கலாம்.

அவ்வாறான நிலைமையில், தமிழர் தரப்பு, தொடர்ந்து இன அரசியல் மட்டுமே பேசி, தன்னை மேலும் தனிமைப்படுத்திக் கொள்ளப் போகிறதா? அல்லது, இலங்கைதான் தங்களதும் தாய் நாடு என்று அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள அடிப்படையில் செயலாற்றப் போகிறதா? அதாவது, அடுத்து வரும் அரசில், நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை முன்னிறுத்தி, தமிழர் தரப்பில் ஒரு பிரிவினரோ அல்லது அனைவருமோ, பங்காற்றப் போகிறார்களா?

இது கொள்கை ரீதியான முடிவு. அதே சமயம், குறிப்பாக கூட்டமைப்பில், 'யார் பெரியவன்? அரசியலில் மூத்தவன்?' என்பன போன்ற பிரச்சினைகளை முன் வைத்து, உள்வீட்டுக் குழப்பங்களும் அரங்கேறுவது தவிர்க்க முடியாது. அந்த நிலையில், கொள்கையை கூறி ஒதுங்கி கொள்வதை, கூட்டமைப்பு ஒரு கலையாகவே மாற்றி உள்ளது. இது தவிர, அனைத்துத் தமிழ் தரப்பினரும் தங்கள் பங்குக்கு அரசில் பதவிகளை ஏற்றுக் கொள்வதாக முடிவு செய்தால், அதிலும் மூத்தவன் – இளையவன் போன்ற பிரச்சினைகள் தலை தூக்கும். அதாவது, தலைவர்களின் தனிப்பட்ட ஈகோ பிரச்சினைகளில், தமிழ் சமுதாயத்தின் எதிர்காலம் மேலும் பாழாக்கப்படும்.

### நேற்று இருந்தார், இன்று இல்லை

எது, எப்படியோ, அடுத்துத் தொடரும் பொருளாதாரப் பிரச்சினை, அரங்கேறி வரும் அரசியல் கூத்து ஆகியவற்றின் இடையே, இனப்பிரச்சினைக்கான தீர்வை, தமிழர் சமுதாயம் அடுத்த சில ஆண்டுகளுக்கு மறந்து விடலாம். ராஜபக்ஷக்களே அரசில் தொடர்ந்தாலும், நேற்று இருந்தார், இன்று இல்லை என்ற அளவில் நாடாளுமன்ற பெரும்பான்மை இருக்கும் போது, சிங்கள – பௌத்த இனவாத வாக்குகளைக் குறிவைத்து அரசியல் செய்யும் அவர்களால், தமிழர்களுக்கு ஆதரவாக தொடர்ந்து பேச முடியுமா, என்பது கேள்விக் குறியே.

அது போன்றே, கடந்த கால அரசியலை வைத்துப் பார்க்கும் போது, சஜித் பிரேமதாஸா, ராஜபக்ஷக்களுடனான அம்பாந்தோட்டை மாவட்ட அரசியலில் இருந்து இப்போதைக்கு வெளியே வருவார் என்று கருத இடமில்லை. அதாவது, ராஜபக்ஷக்கள் தமிழருக்கு ஆதரவு நிலையை எடுத்தால், அதனை கண்மூடி எதிர்ப்பதற்கே பிரேமதாஸ எத்தனம் செய்வார். இவர்கள் இரு தரப்பினருக்கும் இடையே, தற்போதைய நாட்டு நிலைமையில் மூன்றாவதாக தென்னிலங்கை அரசியல் தலைமை ஒன்று உருவாகி, அவர்களும் சிங்கள – பௌத்த பேரினவாத அரசியல் செய்ய முயலவில்லை என்றால் மட்டுமே, இனப்பிரச்சினைக்கு விடிவுகாலம் பிறக்கும்.

இதனையும் தமிழர் அரசியல் மற்றும் சமூக தரப்புகள் புரிந்து செயல்பட வேண்டும்!

# வாழக் ....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல தகவல்களைத் தெரிந்து வைத்திருப்பவனே உலகமயச் சுழற்சியில் மற்ற இனத்தோடு, நாட்டோடு சரிசமமாகப் பீடுநடை போட முடியும்.

அதுமட்டுமின்றி, கல்வி ஒரு மனிதனுக்கு நல்லதொரு வேலை வாய்ப்பையும் உருவாக்கித் தருகிறது. தொடக்கநிலை, இடைநிலைக் கல்வியில் சிறந்த தேர்ச்சி அடைந்தால், உபகாரச் சம்பளத்தோடு கூடிய வேலை வாய்ப்புகள் காத்திருக்கின்றன. இவ்வரிய வாய்ப்பினை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு நமது அரசாங்கமும் மற்றும் பல தனியார் நிறுவனங்களும் சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து நல்லாதரவு நல்கி வருகின்றன. இதன்வழி, பல்வேறு வேலை வாய்ப்புகளைச் சிக்கலின்றிப் பெற்று வெற்றியடைய இயலும். தொடர்ந்து நல்ல கல்வித்தகுதி உடைய ஒருவர் நிறைந்த வருமானத்துடன் சிறந்ததொரு வேலையை எதிர்பார்க்கலாம். இதுபோன்ற வேலை வாய்ப்பினால் நம் வாழ்வு சிறக்கும்.

கல்வி ஒன்றே மனிதன் சொத்து. கல்வி கற்ற மனிதன் சான்றோன். கல்வி காட்டும் வழிகள் நன்றே. கல்வி கற்றால் வாழ்க்கை சிறக்கும். இதுவே வாழ்க்கையின் நியதி. கல்வி கற்ற பின்னே வேலை பெற்றான். சுற்றம் சூழ வாழக் கற்றான். நல்ல பழக்கம் கல்வி கொடுக்கும். இவை அனைத்தும் கல்வி கற்ற பின்னே நடக்கிறது. படித்தால் சுயமாய் சிந்திக்க முடியும். நன்மை எது தீமை எது என தெரியப் படுத்தும்.

ஒற்றை துண்டுடன் ஒழுக்கமே முதலாய் கைகட்டி கண்ணியமாய் நடந்த குருகுலம் அன்று கல்வியில் இருந்தது. அன்னியர் தலையீட்டால் அனைத்தும் ஆங்கிலமயமாய் தொழில் நுட்ப அறிமுகத்தால் இன்று கற்பவை எல்லாம் கணினி மயமாய் ஆனது. நாகரீக குறுக்கீட்டால் கேட்டரிங், க்ளோனிங், டிசைனிங் என பட்டியல் நீண்டாலும் இன்றைய போட்டி உலகில் கல்வி மூளையை அடகுவைத்து முதுகுக்கு பின்னால் விலை பேசும் தரகு வியாபாரமாய் ஆனது. காலம் மாறும். கவிநயம் மாறும். மாறுதல் என்றும் மாறாது இருக்க மாற்றங்கள் உண்டு இன்றும் உலகில். நம் கல்வி முறையில் மாற்றம் வேண்டும். நமது கல்வி நாளைய தலைமுறைக்கு வரலாற்று பாடங்கள் மட்டும் இல்லாமல் சரித்திர பாடமாக இருக்கவேண்டும். புதுப்புது படைப்புகள் தினந்தினம் இங்கு இருக்கிறது புத்தகங்களை நிரப்புவது வாடிக்கை என்றானது இவ்உலகில். மாற்றியமைக்க வேண்டுவது புத்தகத்தை மட்டும் அல்ல, மாறாத கல்வி முறையும் தான்.

கற்றவன் நிறைகுடத்தைப் போன்றவன். கல்லாதவன் அனைத்து விதத்திலும் குறைகுடமாகவே திகழ்வான். கல்வி கற்காதவனிடம் பல தீய குணங்கள் மிக விரைவில் தொற்றிக் கொள்ளும். ஏனெனில், அவர்களுக்குப் பகுத்தறியும் தன்மை குன்றியே காணப்படும். மாசற்ற மழை நீர் செம்மண்ணில் விழுந்து தூயத் தன்மையை இழப்பது போல் ஒரு நல்ல மனிதனும் கல்வி கற்காவிட்டால் மிக விரைவில் தீய குணங்களுக்கு அடிமையாகிச் சீரழிந்து விடுவான். கல்வி ஒரு சமுத்திரத்தைக் காட்டிலும் பெரியதாகும். வாழ்க்கை என்ற சிகரத்தை அடைய கல்வி என்ற தூண்டுகோள் அவசியமாகும். கல்வி கற்காதவன் உலக மக்களால் தற்குறி என்று கூறப்படுவான். ஆகவே, முழுமையான கல்வி கற்றுச் சிறப்பான வாழ்வின் உன்னத நிலையை அடைவோம்.

**தெய்வேந்திரம் வஜிதா**
**(நான்காம் வருடம், சமூகவியல்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

# இடைக்கால ஆளும் அதிகாரம் வடக்கு, கிழக்கிற்கு தேவை!

## காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் அமைப்பின் செயலர் தெரிவிப்பு

தமிழர்களுக்கு உணவு, சமையல் எரிவாயு, பெற்றோல், டீசல் போன்றவற்றை வழங்க இடைக்கால ஆளும் ஆணையத்தை உருவாக்குவோம். இது ஓர் உலக மனிதநேய ஜனநாயக கோரிக்கை என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்ட தளத்தின் முன் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சமீபத்தில் எங்களை விட்டுப் பிரிந்த எங்கள் அன்னை காளிமுத்து சுப்பம்மா (கமலா) அவர்களின் நினைவாக நாங்கள் இங்கு கூடியுள்ளோம். இந்தச் சாவடியில் 30 நாள்களுக்கு முன்பு எங்களுடன் இருந்தார்.

இன்று அவர் நம்முடன் இல்லை. அவருடைய மகன் 2000 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டார். இன்று நமது வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டறிய உதவும் வகையில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் உதவி கேட்கும் நமது 1873 ஆவது நாள் போராட்டம் தொடர்கிறது.

முதலாவதாக, 15 லட்சம் டொலர் கடனுக்காக இலங்கையுடன் இந்தியா சில புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்த போது, தமிழர்களைப் பற்றி குறிப்பிடத் தவறியமை எமக்கு வருத்தமளிக்கிறது.

சிங்களவர்களின் அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்புகளால் பாதிக்கப்படும் தமிழர்கள் தொடர்பாக இந்தியா ஒருபோதும் இலங்கைக்கு நிபந்தனை விதிக்கவில்லை.

13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தக் கோரி கையெழுத்துப் போட்டு இந்தியாவுக்கு அனுப்பியவர்களும் அமைதியாக இருக்கிறார்கள். இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் இந்தியா மீது எந்த கவலையும் தெரிவிக்காதமை வருத்தமளிக்கிறது. தமிழ்த் தலைவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் இந்தியாவைப் பின்பற்றுபவர்கள், தமிழர்களின் தலைவர்கள் அல்லர் என்பதை இது காட்டுகிறது.

கொழும்பில் உள்ள அரசாங்கம் வினைத்திறனற்றதாக இருப்பதால், வடக்கு, கிழக்கிற்கு இடைக்கால ஆளும் அதிகாரம் தமிழர்களுக்குத் தேவை. தமிழர்களுக்கு போதுமான உணவு, சமையல் எரிவாயு, பெற்றோல், டீசல் கிடைக்க இந்த அதிகாரம் உதவும். இந்தப் பொருள்களை எங்களுக்கு வழங்குமாறு தமிழகத்தைக் கேட்கலாம்.

காங்கேசன்துறை துறைமுகத்திற்குப் போதுமான உணவு மற்றும் எரிபொருளை ஏற்றிச் செல்ல புதுடெல்லியிடம் இருந்து தமிழ்நாடு சிறப்பு அனுமதியைப் பெற முடியும். இடைக்கால ஆட்சி அதிகார சபையொன்றை உருவாக்க முடிந்தால் புலம்பெயர் தமிழர்கள் தமிழர்களுக்கு உணவுப் பொருள்களையும் எரிபொருளையும் பெற்றுக்கொள்ள உதவலாம்.

தமிழர்களின் தேவைகளுக்கு உதவ இடைக்கால ஆட்சி அதிகாரத்தை உருவாக்குவோம். தமிழ் மாகாணங்களுக்கான இடைக்கால ஆட்சி அதிகாரத்தில் இருந்து சிவில் சமூகம் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

இங்குள்ள அரசியல்வாதிகளை இடைக்கால ஆட்சி அதிகாரத்துக்குக் கொண்டு வராதீர்கள். தமிழ் அரசியல்வாதிகள் பொய்யர்கள். அவர்கள் அடுத்த தேர்தலைப் பற்றி கவலைப்படுகிறார்கள். அவர்கள் தலைவர்கள் அல்லர். அவர்கள் கொழும்பைப் பின்பற்றுபவர்கள். அவர்கள் வழிகாட்டுவதில்லை.

இந்தத் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் கொழும்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு எந்த அரசியல் தீர்வும் தேவையில்லை. அவர்களுக்கு எந்த மூன்றாம் தரப்பு – அமெரிக்க – ஐரோப்பிய ஒன்றிய மத்தியஸ்தம் தேவையில்லை. எந்தவொரு அரசியல் தீர்வும் அவர்களது சொத்துக்கள், முதலீடுகள், ஓய்வூதியம் மற்றும் கொழும்பில் உள்ள அவர்களது நண்பர்களைப் பாதிக்கலாம்.

எனவே, தமிழர்களுக்கு வடக்கு, கிழக்கில் இருந்து தலைமைத்துவம் தேவை. மூலோபாய சிந்தனை, புதுமை, செயல், தைரியம், ஞானம், பச்சாதாபம் மற்றும் விரும்பத்தக்க நபர் அல்லது வசீகரம் கொண்ட புதிய தலைமைக்காக நாம் அனைவரும் பிரார்த்தனை செய்கிறோம்.

13 ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் ஒரு வலுவான தலைமையைக் கொண்டிருந்தோம். மற்றொரு தலைவருடன் இன்னும் ஒரு முறை இருக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எமது பிரதேசங்களை எமது மக்கள் கட்டுப்படுத்துவதற்கு இதுவே சிறந்த தருணம். தமிழ்த் தலைவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் இப்போது மனம் தளர்ந்துவிட்டனர். இந்த இக்கட்டான நேரத்தில் தமிழர்களுக்கு உதவ இடைக்கால அதிகார சபையை உருவாக்க ஒன்றிணைவோம் எனத் தெரிவித்தார்.

# ஈழத்து பண்பாட்டு விழுமியங்களை காப்பது புலம்பெயர் தமிழர் கடமை!

## சிட்னி நூல் வெளியீட்டில் உரை

ஈழத்தில் தமிழர் மரபுரிமைகள் பற்றியதான சிந்தனையும் செயல்பாடுகளும் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள சூழ்நிலையில் கல்வியியலாளர்களும், வரலாற்று ஆய்வாளர்களும் மாட்டுவண்டிச் சவாரி , ஏறு தழுவுதல் போன்ற நம் பாரம்பரியமான விடயங்களில் அக்கறைசெலுத்துவதைக்காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு 'ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்'என்றநூல்வெளியீட்டுநிகழ்வில் சிட்னியின் மூத்த தமிழ் பேச்சாளர் தனபாலசிங்கம் ஆய்வுரையாற்றினார்.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைப் பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய 'ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்' எனும் மேற்படி நூல் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 40 வருடம் சுன்னாகத்தில் மருத்துவ சேவைகளாற்றிய பிரபல வைத்தியர் டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் 31 ஆம் நாள் நினைவு வணக்க நிகழ்வாக சிட்னி முருகன் கோயில் கலாசார மண்டபத்தில் கடந்த ஏப்ரல் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

தமிழர்களின் பாரம்பரிய கலாசாரமும், ஈழத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் பிரதிபலிக்கும் மாட்டு வண்டிச் சவாரி பற்றிய நூலை ஐங்கரன் விக்கினேஸ்வரா வெளியிட்டு உரையாற்றுகையில்தெரிவித்தவை வருமாறு –

ஈழத் தமிழர்களது கலாசார மரபில் மாட்டு வண்டிச் சவாரி முக்கிய இடம் பெற்றுள்ளமையை, அண்மைக்கால நிகழ்வுகள்வரை தொடர்ந்து வருவதை நம்மால் அறிய முடிகிறது என்று குறிப்பிட்டார்.


ஏறு தழுவுதல் தமிழ் நாட்டின் வீர விளையாட்டு என்றால் ஈழத் தமிழர்களின் வீர விளையாட்டாக மாட்டு வண்டிச் சவாரி அமைகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது. முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு. திருகோணமலை ஆகிய இடங்களிலும் மாட்டுவண்டிச் சவாரி காலம் காலமாகத் தொடர்வதை நாம் அவதானிக்கலாம் என்றும் உரையாற்றினார்.

இந்நூலை ராஜன் விக்கினேஸ்வரா வெளியிட்டு வைக்க முதற்பிரதியை சிட்னி பிரபல்ய டாக்டர் மனோமோகன் பெற்றுக்கொண்டார்.

மேலும் தனபாலசிங்கம் ஆய்வுரையாற்றுகையில் –

தமிழர் நாகரிக வரலாற்றில் மாடு மிக முக்கிய பங்கு வகித்து வந்துள்ளமையை நாம் வரலாற்று ஏடுகளில் காண முடியும் என்றும் கூறினார். ஏறு தழுவுதல் எனும் தமிழரின் வீர விளையாட்டு இன்று வரை பல்வேறுவடிவங்களில்தொடர்வதை நாம் காணலாம், எருதை அடக்கி இளைஞர்கள் தம் வீரத்தை நிரூபித்து திருமணம் செய்தமையை சங்க இலக்கியப் பாடல்களில் காணலாம்.

காளைமாடுகளை அடக்கிவெற்றி கொள்ளல் தமிழர் பண்பாட்டில் தொடர்ந்து வருகின்ற ஒரு வீர விளையாட்டு. தமிழ் நாட்டில் அது பெரும் கொண்டாட்டமாக இன்று வரை தொடர்வதை நாம் காணலாம். காளை மாடுகள் தமிழ் மரபில் முக்கிய இடம் வகித்தமையும் ஈழத் தமிழர்களது பண்பாட்டு வெளியில் காளை மாட்டுச் சவாரி முக்கிய இடம் வகித்தமையையும் அது அண்மைக் காலம் வரை தொடர்வதையும் நாம் காணலாம் என்றும் குறிப்பிட்டார்.




ஈழத்தில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டிச் சவாரி விளங்குகின்றது. அது ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலப் பகுதி வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பி இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது. இன்றைக்கு இந்தநூல்வெளிவருவதற்கு காரணம் வைத்தியர் விக்கினேஸ்வராதான். அன்னார் வண்டிச் சவாரி மரபில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார் என்பதை சுன்னாகம் பிரதேச சவாரிப் பிரியர்கள் தந்த தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

ஈழத்தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், ஈழத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது தாயக மக்களின் கடமை மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்களின் பெருங்கடமையும் காலத்தின் கட்டாயமுமாகும் என சிட்னியின் மூத்த தமிழ் பேச்சாளர் தனபாலசிங்கம் குறிப்பிட்டார்.

# அரசின் 69 லட்சமும் தற்போது வீதியிலே!

## ஹர்ஷண ராஜகருணா சாடட்டை



அரசாங்கத்துக்கு 69 லட்சம் மக்களின் ஆணை இருப்பதாக தெரிவித்தாலும் தற்போது 9 பேரும் இல்லை. நாட்டை அழித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போதும் ஆடை அணிந்தா இருக்கின்றார்? என எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா சபையில் கேள்வி எழுப்பினார்

நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பான சர்ச்சையின்போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக 69 லட்சம் மக்கள் வாக்குகளை வழங்கினர். இன்று அந்த மக்களின் பெரும்பான்மையானவர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லுமாறு கோரி வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர். அரசுக்கு ஆதரவாக 69 லட்சம் மக்கள் இருக்கின்றனர் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறினார். ஆனால், அரசுக்கு ஆதரவாக 9 பேர் கூட இல்லை.

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் இருக்கும் நெருக்கடியை நாங்களே ஏற்படுத்தினோம் என போன்றே அரசாங்க தரப்பினர் தெரிவிக்கின்றனர். இவர்கள் ஆடை அணிந்துகொண்டா இவ்வாறு தெரிவிக்கின்றனர் என கேட்கின்றேன். அதே போன்று ஜனாதிபதி பதி நாட்டில் இருக்கின்றாரா எனத் தெரியாது. அவரும் ஆடை அணிந்துகொண்டா இருக்கின்றார் என கேட்கின்றோம். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தந்தை, தாய், மகள் என மூவர் ஒரே விபத்தில் சாவு



தனமல்வில பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ – கப் வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

தந்தை, தாய் மற்றும் மகள் என மூவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பில் தனமல்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சனி முதல் 9 நாள்கள் தொடர்ந்து விடுமுறை

கொழும்பு, ஏப்ரல் 08

எதிர்வரும் திங்கட்கிழமை (ஏப்ரல் 11) மற்றும் செவ்வாய்கிழமை (ஏப்ரல் 12) பொது விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே 13,14,15,16,17 ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டிருந்தன. அதன்படி, நாளை 9 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை 9 நாள்கள் தொடர் விடுமுறை நாள்களாக அமையப் போகின்றன.

## வட்டுக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நவாலி பகுதியில் உறவினர் வீடொன்றில் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவில் கலந்துகொண்ட பின்னர் இரு இளைஞர்களும் தமது வீடு நோக்கிச் சென்றபோது, மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்ற மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதன்போது மோட்டார் சைக்கிளின் ஓட்டி சம்பவ இடத்திலையே உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த மற்றைய இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த சமயவர்த்தனா ஆகியோரைக் கொண்ட ஆயமே மனுக்களை விசாரணைக்கு ஏற்கும் முடிவை அறிவித்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ உட்பட நான்கு சட்டத்தரணிகள் நான்கு மனுதார்கள் சார்பிலும் முன்லையாகி வாதிட்டனர்.

அரசுத் தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ராஜீவ குண்திலக முன்னிலையாகி பதில் வாதங்களை சமர்ப்பித்தார்.

வழக்கு விசாரணை ஜுலை 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மேற்படி அவசரகால நிலைமை கடந்த முதலாம் திகதி அறிவிக்கப்பட்டது. அதற்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் கடந்த 4ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டன. எனினும் அந்த அவசரகால நிலைமைப் பிரகடனத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமலேயே கடந்த ஐந்தாம் திகதி அதனை வாபஸ் பெற்றார் ஜனாதிபதி.

ஆயினும் அந்த அவசரகால நிலைப் பிரகடனத்துக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணை செய்ய நேற்று உயர்நீதிமன்றம் முடிவு செய்தது. (உ)

## கோட்டா பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி பதவி விலகாமல், அரசால் முன்வைக்கப்படும் யோசனைகளை ஏற்பதற்குத் தாம் தயாரில்லை எனவும் அவர் கூறினார்.

2001இல் நெருக்கடி ஏற்பட்டபோதும், தேர்தல் நடத்தப்படும் வரை ஜே.வி.பி. அரசுக்கு நேசக்கரம் நீட்டியிருந்தது என்பதையும் அநுர நினைவு கூறினார்.

அதேவேளை, மக்கள் போராட்டங்களை, வன்முறையாக மாற்ற வேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## கொடுத்த கடனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த பெண்ணொருவர் கடந்த மார்ச் முதலாம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் பணம் கொடுக்கலில் ஈடுபட்டு வருபவர் எனவும், குடும்பம் ஒன்றுக்குக் கொடுத்த 3 லட்சம் ரூபா பணம் வாங்கச் சென்றபோதே காணாமல் போயிருந்தார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன் அடிப்படையில், மணியந்தோட்டம் பகுதியில் அந்தச்ப் பெண்ணிடம் பணம் வாங்கிய குடும்பத்தினரைப் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தி இருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், பணம் வாங்கிய குடும்பத்தினர், அப்பெண்ணைப் படுகொலை செய்து, அவர்களது வீட்டுக்குப் பின்னால் புதைத்துள்ளனர் எனவும் –

அவரது மோட்டார் சைக்கிளையும் புதைத்துள்ளனர் எனவும் – கூறப்படுகின்றது.

இந்த அடிப்படையில், குறித்த பகுதியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள நீதிமன்றில் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் எடுத்துள்ளனர்.

அதேவேளை, அந்த வீட்டில் வசித்து வந்த கணவன், மனைவி மற்றும் அவர்களுக்கு உதவிய குற்றத்தில் ஒருவருமாக மூவரைக் கைதுசெய்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கோட்டாவே வெளியேறு; குடும்ப ஆட்சி வேண்டாம்

## மன்னாரில் அரசுக்கு எதிராகப் போராட்டம்






(மன்னார் நிருபர்)

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராகத் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.


தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் அருட்தந்தையர்கள், அருட் ச கோதரிகள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கோட்டாபயவே வெளியேறு, குடும்ப ஆட்சி வேண்டாம், மக்களிடம் கொள்ளையடித்த பணத்தை மக்களுக்கே கொடு போன்ற பல்வேறு கோங்களை எழுப்பியவாறு பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருப்பாடுகளின் நாடகமான 'காவிய நாயகன்' ஆரம்பம்!

## ஞாயிறு வரையிலும் தொடர்ந்து திருமறைக் கலாமன்ற அரங்கில்



திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் பிரமாண்டமான அரங்க ஆற்றுகையான 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம் நேற்று ஆரம்பமானது. பெரும் எண்ணிக்கயான மக்கள் நாடகத்தைப் பார்வையிட்டனர்.

இந்த நாடகம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள் ளது.

வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கும் ஏனைய தினங்களில் மாலை 6.45 மணிக்கும் இவ்வாற்றுகை ஆரம்பமாகுமென ஏற்ப்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த கஞ்சா மூடைகள் கைப்பற்றப்பட்டன

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப். 08

தமிழ்நாடு ஆறுகாட்டுத்துறையில் இருந்து இலங்கைக்கு கடத்த முற்பட்ட ஒரு கோடி ரூபா (இலங்கைப் பணத்தில்) மதிப்புடைய 9 கஞ்சா மூடைகள் தமிழக பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ஆறுகாட்டுத்துறை கடற்கரையிலிருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படவுள்ளதாகத் தமிழகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பெயரில் இந்தக் கஞ்சா நேற்று மீட்கப்பட்டுள்ளது.



இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சாவின் இந்தியப் பெறுமதி 25 லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.04.2022இல் வெளியிடப்பெற்றது.